AR
933

அண்ணல் நபி பற்றி அறிஞர் அண்ணா

தொகுப்பு: ஜே. எம். சாலி, எம். ஏ.,

அண்ணல் நபி பற்றி அறிஞர் அண்ணா

தொகுப்பு :

ஜே. எம். சாலி, எம்.ஏ.

வெளியீடு :

நூர் பதிப்பகம்
இரவாஞ்சேரி 609501

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

விற்பனை :

P.B.NO. 29
காஜியார் புக் டிப்போ
முஸ்லிம் தெரு, M. சாவடி, தஞ்சாவூர்.
போன் 1529

முதற்பதிப்பு : ஏப்ரல், 1980
மூன்றும் பதிப்பு : ஏப்ரல், 1986

தமிழ் நூல் காப்பகம்
09142
தமிழ் நகர், விருத்தாசலம் - 606 001.

விலை : ரூ. 2-00

மாருதி பிரஸ்,
பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600014

அண்ணாவின் சிந்தனைகள்

பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடாத துறையே இல்லை. மதங்களைப்பற்றி தெளிவாக ஆராய்ந்து திட்டவட்டமான சிந்தனைகளை மொழிந்தவர் அண்ணா. நபிகள் நாயகத்தைப் பற்றியும் இஸ்லாமிய நெறியைப் பற்றியும் ஆராய்ந்து ஆணித்தரமான கருத்துக்களை வழங்கிய பெருமை அண்ணாவுக்கு உண்டு.

நபிகள் திலகத்தின் பிறந்தநாள் பெருவிழா-மீலாதுவிழா-மேடைகளில் அண்ணா அவர்கள் அள்ளி வழங்கிய கருத்துக்கள் எண்ண எண்ண இனிமை தருபவை. எழுச்சியூட்டுபவை. 1957, 58-ம் ஆண்டுகளில் அண்ணா நிகழ்த்திய மீலாது உரைகளை முஸ்லிம் முரசு, மணிவிளக்கு மாத இதழ்கள் வெளியிட்டன. அவற்றை ஒரு சிறிய வெளியீடாகக் கொண்டுவந்தால் இந்தத் தலைமுறையினர் படித்துணர்ந்து பயன் பெறுவார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டது.

தங்கள் இதழ்களில் வெளிவந்த உரைப் பகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ள இசைவு தந்த ஆசிரியர்களுக்கும் இறையருள் துணைநிற்க இந்தச் சிறு பிரசுரம் வெளிவர உதவிய நண்பர்களுக்கும் என் நன்றியை உரிமையாக்குகிறேன்.

நபிகள் நாயகம் அவர்களைப் பற்றி கவியரசி சரோஜினி நாயுடு நிகழ்த்திய சில சொற்பொழிவுகளைப் படித்தபோது ஓர் உரை என்னை வெகுவாகக் கவர்ந்தது. அதை ஒரு தோற்றுவாயாகச் சேர்த்துள்ளேன்.

அன்பன்,
ஜே. எம். சாலி,
சென்னை-14

கவியரசியின் கருத்துரை

உலக மதங்களுக்குள்ளேயே மிகப்பெரியதும் ஆண்டில் இளையதுமான இஸ்லாத்தைப் பற்றி கிறிஸ்தவர்கள், இந்துக்கள், புத்தர்கள், பார்சீக்கள் ஆகியவர்களிடையே தவருன கருத்துக்கள் பல நிலவுகின்றன. மிகவும் இளையது என்றும் பெரியது என்றும் இஸ்லாத்தைப் பற்றி நான் குறிப்பிடும்போது அதன் உண்மையை உணர்ந்துதான் கூறுகிறேன். என் சொந்த மதத்தையோ, புத்த கிறிஸ்தவ மதங்களையோ குறைத்துக் கூறவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. 'மிகப் பெரியது' என்று நான் கூறும் போது அதற்கு முக்கிய காரணமாக இருப்பது நவீன உலகத்துக்கு இஸ்லாம் அருளிய ஜனநாயகம்தான்.

எந்த சகோதரத்துவ அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று இன்றைய் நாகரிக உலகம் விரும்பி நிற்கிறதோ, அதே சகோதரத்துவத்தை ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே (இன்றைக்கு 1400 ஆண்டுகள்)-பாலைவனத்தில் ஒட்டகம் ஓட்டிக் கொண்டிருந்த மனிதரால் பிரசாரம் செய்யப்பட்டது.

எனது முன்னேர்கள் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு தத்துவ ஞான உபதேசம் செய்து கொண்டிருந்த காலத்தில் அரபு நாடு அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தது. அநாகரிகமும் காட்டுமிராண்டித்தனமும் அங்கு குடிகொண்டிருந்தன. புத்தர், புத்தகயாவில் போதி மரத்தடியிலும் சாரநாத்திலும் நிர்வாணம் பற்றி பிரசாரம் செய்து கொண்டிருந்த காலத்தில் உலக ஜனநாயகம் என்ருல் என்னவென்றே ஒருவருக்கும் தெரியாது. இயேசுநாதர் எதிரிகளால் சிலுவையில் அறையப்பட்ட காலத்தில் கூட ஏக சகோதரத்துவக் கொள்கை இந்த உலகில் இடம் பெறவில்லை. ஆனல் அது எதிர்த்துப்

போரிடப் பட்டது. கால்களால் மிதித்துத் துவைக்கப் பட்டது.

எனவே, அரேபியாவிலே ஒட்டகம் ஓட்டிக் கொண்டிருந்த ஒரு மனிதர் இறுதியாக—இந்த உலகில் தோன்றி—ஏக சகோதரத்துவத்துக்கு ஒரு சரியான விளக்கம் கூற வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. எந்தவிதமான உயர்வு தாழ்வும் 'வேற்றுமையும் இல்லாத மக்களைக் கொண்ட ஒரு 'குடி அரசு' எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே விளக்க வேண்டியிருந்தது.

ஒட்டகம் ஓட்டிக்கொண்டிருந்த இந்த மனிதர் யார்? இவர் உலகத்துக்கு நம்பிக்கையூட்டும் நல்ல செய்தியைக் கொண்டு வந்தது ஏன்?

பல பெரிய மதங்கள் மீது மாசு படிந்து விட்டது. அந்த மதங்களின் குருமார்கள் இழைத்த கொடுமைகள் சகிக்க முடியவில்லை. எனவே, மதத்துக்கு மாசுகற்பித்த அந்தக் கொடுமைகளிலிருந்து விடுதலைபெற வேண்டும் என்று இந்த உலகம் விழைந்தது.

உலக மக்களுக்கு அவ்வப்போது இழைக்கப்படுகின்ற கொடுமைகளிலிருந்து அவர்களை எப்படியாவது விடுவித்து வருகின்ற ஆண்டவன் இந்த சாதாரண பாலைவன மனிதரின் இதயத்திலே. 'ஆண்டவன் ஒருவன்' என்ற உண்மையை உணர்த்தினன். ஆண்டவனல் படைக்கப்பட்ட மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உண்மையை உணர்த்த இந்த ஏக தெய்வக் கொள்கையே, போதிய ஆதாரமாயிருக்கிறது.

மேல் நாடுகள் எதையெல்லாம் புதிய கருத்துக்கள் என்றும் மகத்தான சாதனைகள் என்றும் கூறுகின்றனவோ, அவையெல்லாம் அந்த அரேபியாவின் பாலைவனச் சோலையிலே விதைக்கப்பெற்ற வித்துக்களின் விருட்சங்களேயன்றி அவற்றில் புதியது ஒன்றுமில்லை.

இன்று ஐரோப்பாவில் தோன்றியுள்ள நாகரிகத்துக்கு மூலகாரணம், ஆழ்கடல்களைக் கடந்து சென்று ஸ்பெயினில் குடியேறிய பண்டை முஸ்லிம்களின் கலைஞானமும், கல்வியுமே என்ற உண்மைதான் எத்தனை பேருக்குத் தெரியும்? பாரசீக இலக்கியம் ஆரியர்களுடையது என்று சொல்லிக் கொண்டு அதனை ஆர்வத்துடன் படிக்கின்றனர் சிலர். ஆனால் அந்த அழகிய மொழிக்கு ஆண்மையும் வீரமும் அளித்தவர்கள் அரபு நாட்டுப் போர் வீரர்கள் என்ற உண்மை எத்தனை பேருக்குத் தெரியும்?

முஸ்லிம்களே! உங்களுடைய மாபெரும் பொறுப்பை நீங்கள் உணரவேண்டுமென்று விரும்புகிறேன்.

இஸ்லாமிய புத்துலகத்தைப் புணர்நிர்மாணம் செய்ய வேண்டிய நீங்கள் உங்களின் இறைவன் திருத்தூதர் இயம்பிச் சென்ற இணையற்ற கொள்கைகளை முற்றிலும் அடியொற்றி நடக்கவேண்டாமா? அவர் தம்மைத் தாமே கடவுள் தன்மை படைத்தவர் என்று கூறிக் கொள்ளவில்லை. அல்லது ஆண்டவனுக்குப் பிரதிநிதி என்று அவர் பேசிக் கொள்ளவில்லை. வருந்தியுழைப்பதில் வாழ்வு இருக்கிறது. ஒற்றுமையில் ஒருமைத்தன்மையும் இன்ப உணர்வும் நிலவுகின்றன. தன்னலத்தியாகத்தால் நம்பிக்கை உதயமாகிறது.

உங்களுடைய சொந்த மக்களின் சக்தியும் உயர்ந்த மனப்பான்மையும் உங்களின் கொள்கையை, இலட்சியத்தை மிக உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லக் கூடும். இன்று நீங்கள் செய்யத் தகுந்தது இதுதான். உலகத்தில் ஒரே ஒரு நாடுதான் தங்களுக்குச் சொந்தம் என்று முஸ்லீம்கள் உரிமை கொண்டாட மாட்டார்கள் என்பது உண்மை. வேற்றுமை உணர்வும், குறுகிய புத்தியும், சுயநலமும் ஒரே மாநில மக்களிடையேகூட தலைவிரித்தாடுகின்ற இந்தக் காலத்தில் எந்த இனமும் தனித்து வாழவோ அல்லது மரித்துப் போகவோ முடியாது என்ற உண்மையை உணர்த்த வேண்டியது ஒவ்வொரு முஸ்லீமின் தலைமையான கடமை

என்பதை உணரவேண்டும். அவன் ஏனைய மக்களுடன் ஒன்றுபட்டு வாழவேண்டும். அவன் தன்னுடைய திறமையையும், அனுதாபத்தையும், ஆதரவையும் பிறருக்கு அளித்து உலக மேன்மைக்கு உதவி புரிய வேண்டும்.

இந்த உலகத்தைப் புனர் நிர்மாணம் செய்யக் கூடிய புனிதத் தொண்டிலே நீங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

உலகத்துக்கே உங்கள் பெண்ணினம், பிறருக்கு முன் மாதிரியாக விளங்கவேண்டும். உலக மக்களைப் பார்த்து அவர்கள் இந்த வீரமுழக்கத்தைச் செய்யவேண்டும்.

"ஆடுமாடுகளைப் போலவும் தட்டுமுட்டுச் சாமான்களைப் போலவும் ஒரு காலத்தில் நீங்கள் நடத்தி வந்த பெண்ணினத்துக்கு எங்கள் நபிபெருமானார் அளித்த பெருமைகளையும் உரிமைகளையும் பாருங்கள். இறைவனது வெற்றிக்கும் பெருமைக்கும் துணைநின்றவர்கள் நாங்களே, எளியவாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக ஒரு கை ராட்டினத்தையும், மாவரைக்கும் கல்லையும் மட்டுமே தமது சீதனப் பொருளாகப் பெற்று வந்த பீவி பாத்திமா நாயகத்தின் வழிவந்தவர்களும் நாங்களே" என்று உங்கள் பெண்கள் உலகத்துக்கு அறிவிக்க வேண்டும்.

எளிய வாழ்க்கையை நீங்கள் போதிக்க வேண்டும்; சிக்கனத்தைப் பற்றிப் பிரசாரம் செய்யவேண்டும். எல்லாவற்றையும்விட தியாக உணர்வை உலகுக்கு உணர்த்த வேண்டும். சமாதானத்தையும் சாந்தியையும் பிரசாரம் செய்யவேண்டும். ஒரு முஸ்லிம் தனது சகோதர முஸ்லிமை சந்திக்கும்போது சலாம்—சமாதானம்—கூறுகிறான். இந்தச் சமாதானம் என்பது இறைவன் திருவுளக் கருத்தை இனிது நிறைவேற்றுவதால்தான் நிலைபெற முடியும்.

—கவியரசி சரோஜினி நாயுடு
கொழும்பு நகரில் நிகழ்த்திய சொற்பொழிவு.

உள்ளே...

		பக்கம்
1.	தமிழகத்தில் இஸ்லாம்	9
2.	இருளும் ஒளியும்	11
3.	வேண்டாம் அற்புதங்கள்!	16
4.	சொல்லும் செயலும்	19
5.	திருத் தொண்டு	22
6.	சிறந்த மார்க்கம்	25
7.	சமத்துவ மார்க்கம்	28
8.	ஒன்றே குலம், ஒருவனே தேவன்	32
9.	அறப்பணி	35
10.	அண்ணாவின் எண்ணங்கள்	39
11.	கருணை நபிபற்றி கலைஞர்	42
12.	அண்ணல் நபி பற்றி ஆதீனம்	44
13.	அறிஞர்கள் போற்றும் பெருமானார்	46

தமிழகத்தில் இஸ்லாம்

பலாச்சுளையை சுவைக்க முற்படுவோர், முதலில் மேல் தோலை நீக்கி, பிசிறுகளைக் களைந்துவிட்டு, பிறகு சுளையை எடுத்து அதிலுள்ள கொட்டையையும் நீக்கிவிட்டே தின்பார்கள். அது போன்றே மதக் கருத்துக்களையும் உணர வேண்டும்.

சிலர் பலாப்பழத்தின் முன்தோலையே மதம் என்கிறார்கள். அவர்களுக்காகப் பரிதாபப்படுகிறோம். சிலர் பிசிறுகளை ஒட்டிக் கொண்டு மதம் என்று அலைகிறார்கள். அவர்களைக் கண்டால் நமக்கு அருவருப்பாக இருக்கிறது. மற்றும் சிலர் கொட்டையுடன் பலாச்சுளையை விழுங்க முற்படுகிறார்கள். அவர்களைக் கண்டு அனுதாபப்படுகிறோம். ஆனால் உரித்தெடுத்த பலாச்சுளையைப் போன்றதுதான் இஸ்லாம்.

இஸ்லாம் எல்லா காலத்திற்கும், எல்லா நாட்டினருக்கும் பொருந்திய மதமாக அமைந்திருக்கிறது. ஒரு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு ஏதாவது ஒரு பிரச்னை தோன்றினாலும் செய்ய வேண்டுவதெல்லாம் நபிகள் நாயகம் அவர்களுடைய கருத்துக்களிலிருந்து பகுத்தறிவு விளக்கம் கொடுக்க வேண்டியதுதான், எல்லாப் பிரச்னைகளுக்கும் விடைகாண முடியும்.

பிற மதங்களிலே அற்புதங்கள் அதிகம்; அடிப்படை உண்மைகள் குறைவு. இஸ்லாத்திலே அடிப்படை உண்மைகள் அதிகம்; அற்புதங்கள் குறைவாகவேயுள்ளன.

இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற கூற்று அர்த்தமற்றது; இஸ்லாத்தை பரப்ப வாள் பயன்பட்டதில்லை. ஆனால் சிலுவை யுத்தங்களிலே இஸ்லாத்தைக் காக்க அது பயன்பட்டதுண்டு.

இந்தியாவில் முகலாயர் ஆட்சியும் மற்ற முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியும் இருந்தபோது முஸ்லிம்கள் ஒரு கோடி பேர்கூட இருக்கவில்லை. அந்த அரசுகளெல்லாம் மறைந்த பிறகே 10 கோடி மக்களாகப் பெருகினர்கள்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ன நன்னெறி பரவியிருந்த நாட்டிலே இடையிலே அக் கருத்துக்களெல்லாம் மறந்திருந்த நிலையில் இஸ்லாம் அக்கருத்துக்களையே வலியுறுத்தவும், 1300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் இஸ்லாம் பரவிற்று.

தொட்டிலிலே படுத்துறங்கும் குழந்தையைத் தட்டி யெழுப்பிய உடனே தாயை எப்படிக் கட்டியணைத்துக் கொள்கிறதோ அவ்வாறே தமிழகத்தில் இஸ்லாமிய கருத்துக்கள் தழுவப்பட்டன.

அறிஞர் அண்ணு
காஞ்சீபுரம் மீலாத் விழாவில்.

இருளும் ஒளியும்

இங்கு எனக்கு முன்பு பேசிய தோழர்கள் எல்லோரும் நல்ல முறையிலே, இஸ்லாமிய கோட்பாடுகளையும், நபிகள் நாயகத்தின் மாண்புகளையும் எடுத்துரைத்தார்கள். இங்கு பேசியவர்கள் அனைவரும் இளைஞர்களாகவும், அந்த இளைஞர்கள் எல்லோரும் இஸ்லாமியர்களாகவும் இருந்தார்கள் என்பதையறிந்து நான் மூன்று காரணங்களால் மகிழ்ச்சி யடைகிறேன்.

இஸ்லாமிய இளைஞர்கள் நல்ல முறையிலே பேசிப் பழக வேண்டும் என்பது என் ஆசை; அதன்படி, பேசிய இளைஞர்கள் அனைவருமே நன்ருகப் பேசினர்கள்,

இரண்டாவதாக, இஸ்லாமியருக்கும்—தி. மு. கழகத் திற்கும் தொடர்பு அதிகம் இருப்பதால் சில முஸ்லிம் பெரிய வர்கள் பயப்படுகிருர்கள். 'அது தவறு' என்பதை எடுத் துரைத்தார்கள்.

மூன்ருவதாக, இஸ்லாமிய இளைஞர்கள் முகம்மது நபியின் அருமை பெருமைகளை நன்ருக அறிந்திருக்க வேண்டும் என்பதிலே நாட்டம் கொண்டவன் நான். இங்கு பேசிய வர்கள் முகம்மது நபியைப்பற்றி நல்ல முறையிலே— எல்லோருக்கும் புரியும் வகையிலே—நல்ல தமிழிலே எடுத் துரைக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பதிலே மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்குபேசிய நண்பர்கள் கூறினர்கள்—இந்த விழாவில் அண்ணு கலந்து கொள்ளலாமா என்று யாரோ சிலர் கேட்டதாக நினைத்துக் கொண்டு, அதற்கு பதிலளிக்கும் வகையிலே பேசினர்கள். இப்பொழுதெல்லாம் அப்படி கேட்பதில்லை. அதற்கு பதிலாக, 'இவ்வாண்டு அண்ணுதுரை ஏன் கலந்து கொள்ளவில்லை?' என்றுதான் கேட்கிருர்கள். ஒரு 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு கேட்டார்கள்—முகம்மது

நபி விழாவிலே அண்ணுதுரை கலந்து கொள்ளலாமா?—என்று! ஆனல் இப்பொழுது கேட்பதில்லே.

எனக்கும் இஸ்லாமியர்களுக்கும் ஏற்பட்ட தொடர்பு இன்று நேற்றல்ல—30 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருக்கிறது. நண்பர் ஒருவர் இங்கு பேசுகையில் நான் வெளியூரில் ஒரு விழாவிலே கலந்துகொண்டபோது யாரோ என்னை ஒரு கேள்வி கேட்டதாகவும், அதற்கு நான் இன்ன விதத்தில் பதிலளித்தேன் என்றும் குறிப்பிட்டார். அதை உங்களிடத்திலே விளக்கமாகச் சொல்லுவதும் நல்லது என்று நினைக்கிறேன். என்னைக் கேட்டவருடைய பெயர்கூட எனக்கு நினைவிருக்கிறது.

'நீங்கள் இவ்வளவு நன்ருக முகம்மது நபியையும், இஸ்லாமியக் கோட்பாடுகளையும் பற்றிப் பேசுகிறீர்கள். நீங்கள் ஏன் இஸ்லாமியத்திலே சேர்ந்து விடக்கூடாது?''—என்று அவர்கள் கேட்டார்கள்.

அவர்களுக்கு அளித்த பதில் இதுதான்: 'இஸ்லாத்தில் மார்க்கக் கட்டளை என்றும், திட்டங்கள் என்றும் சில உண்டு. இஸ்லாமிய சமுதாய அமைப்புக்கு 'ஜமாஅத்' என்று பெயர். இஸ்லாமிய கோட்பாடுகளை—மார்க்கத் துறையை ஏற்று, அதிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் ஏக தெய்வம் என்ற கொள்கையுடையவர்களாக இருக்க வேண்டும். ஆண்டவனுக்கு உருவம் கொடுத்து, அதற்குப் பூசை செய்து பிறரை ஏமாற்றும் எண்ணம் கூடாது. அந்த வகையிலே பார்த்தால் நான் இஸ்லாமியன்தான். ஆனல் இஸ்லாமிய 'ஜமா அத்' திலே நான் இல்லே.

நான் இஸ்லாத்தில் சேர்ந்து அதன் பிறகு பாராட்டுவதிலே அருமை பெருமை இல்லே. என் வீடு மிக நல்ல வீடு என்று நானே எடுத்துச் சொல்வது எப்படிச் சரியில்லேயோ, அதைப் போலத்தான் அது அமையும். என் வீட்டைப்பற்றி நான் பெருமைப்படுவதிலே ஆச்சரியமில்லே, 'ஜமாஅத்' திலே சேராமலே இஸ்லாத்தின் நன்மைகளை எடுத்துச் சொல்வதில் தான் பெருமை.

எனக்கு முன் பேசியவர்கள் எச். ஜி. வெல்ஸ், ஜார்ஜ் பெர்னுட்ஷா, காந்தி போன்ற பெரியவர்கள் முகம்மது நபியைப் பற்றிக் கூறியுள்ளதை எடுத்துச் சொன்னுர்கள். அந்தப் பெரியவர்களெல்லாம் இஸ்லாமியர்களல்லாதவர்களானதால்தான் அவர்கள் பாராட்டியதிலே பெருமை இருக்கிறது. எனவே, ஆயிரத்தோடு ஆயிரத்தொன்று என்று என்னையும் இஸ்லாமியனுக்குவதிலே பெருமையில்லே.

யார் எந்த மார்க்கத்தைச் சேர்ந்தவரானுலும், எந்த இனத்தில்—குலத்தில் பிறந்தவரானுலும் நபிகள் நாயகத்தைப் பற்றிப் பேசினல், இஸ்லாமிய சமூகத்தினர் வரவேற்கின்றனர்.

இந்நாட்டிலேயுள்ள இஸ்லாமியர்கள் சிறுபான்மையான—மைனரிட்டி சமூகமாக உள்ளவர்கள்; மற்றவர்கள் பெருவாரியான எண்ணிக்கையுள்ளவர்கள். இந்த இரு மார்க்கத்தாரிடையேயும் ஒற்றுமை நிலவ—அவர்களிடையே நல்ல தொடர்பும், சகோதரபாவமும் ஏற்பட இப்படிப்பட்ட திருநாட்களை, பலரையும் அழைத்து நடத்துவது நல்லதாக அமையும்.

தென்னுட்டை பொறுத்த வரையில் இந்த இரு சமூகத்தாரிடையிலே என்றும் பகை ஏற்பட்டதில்லே. இரு சாராரிடையேயும் நல்ல தொடர்பு தலேமுறை தலேமுறையாக இருந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பார்த்தால் அங்குள்ள முஸ்லிம்களும் மற்ற சமூகத்தினரும் ஒருவருக்கொருவர் அண்ணன், தம்பி என்று முறை வைத்துப்பேசிக்கொள்வதைப் பார்க்கலாம்.

வட நாட்டிலே இந்து—முஸ்லிம் கலகம் கொலே வெறியாட்டம் நடந்த போதுகூடத் தென்னுட்டில் நல்ல தோழமை நிலவியது. அப்படிப்பட்ட தோழமை உணர்ச்சியும் ஒற்றுமைப் பண்பாடும் வளரச்செய்வது தி. மு. கழகப் பணிகளில் ஒன்ருகும்.

நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை—அவர் பிறந்த நாடு, அவர் காலத்திலிருந்த சூழ்நிலை, மத நம்பிக்கைகள், பிற்போக்கான சீர்கேடான நிலை, மூட நம்பிக்கைகள், பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமைகள் ஆகியவற்றைப் பற்றிய நுணுக்குகளை—நண்பர்கள் இங்கு உங்களிடையே விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

முகம்மது நபி, ஒரு மார்க்கத்தை உண்டாக்கியது மட்டுமல்ல, தவறான குருட்டு நம்பிக்கையிலே சிக்கிக் கிடந்தவர்களை விடுவித்துக் காப்பாற்றி, நல்லதொரு சமுதாயத்தையும் உருவாக்கினார். அதற்கான ஒரு நல்ல அரசியலையும் ஏற்படுத்தினார். மிகுந்த நெருக்கடியான—ஆபத்தான காலத்திலேயே வெற்றிகரமாக தமது இலட்சியங்களை நிறைவேற்றிக் காட்டினார்.

அதேபோல் தி. மு. கழகமும் மூன்று துறைகளில் பணியாற்றி வருகிறது; இதை நான் சொல்வதால் தி.மு. கழகத்தையும் இஸ்லாத்தையும் ஒன்றாக்கிக் காட்ட முயலுவதாகக் கருதவேண்டாம்! ஏனென்றால், தி.மு. கழகம் இக்கருத்துக்களை விஞ்ஞானமும் கல்வியறிவும் நன்கு பரவியுள்ள இக்காலத்தில் சொல்லி வருகிறது. இந்தக் காலத்தில் நல்ல கொள்கைகளை எடுத்துச் சொல்ல அதிகத் தைரியம் தேவையில்லை. நபிகள் நாயகம் அவர்களுடைய காலத்தில் சொல்ல வேண்டுமானால், நெஞ்சுரம் அதிகம் தேவையாக இருந்தது! 'பூமி உருண்டையானது; சூரியனை பூமி சுற்றி வருகிறது' என்கின்ற உண்மைகளையெல்லாம் அறியாத—விஞ்ஞானத் தெளிவு இல்லாத காலம் அது! மக்கள் பய உணர்ச்சியும் காட்டுமிராண்டித்தனமும் கொண்டிருந்த காலம்!

இருட்டுக் காலத்தில் நல்ல ஒளியைத் தந்தார் முகம்மது நபி. அந்த ஒளியின் வெளிச்சத்தை எடுத்துக் காட்டுபவர்கள்தான் நாங்கள்.

சீர்திருத்தவாதிகள் செய்கின்ற காரியத்துக்கே இந்தக் காலத்தில் எத்தனையோ தொல்லைகள் ஏற்படும்போது, உலகத்

தில் நபிகள் நாயகம் போன்றவர்கள் அந்தக் காலத்தில் எத்தனை இன்னல்களைத் தாங்க நேர்ந்திருக்கும்?

நம்மில் சிலர் நம் கொள்கைகளைப் பரப்ப அதைரியம் ஏற்படுகிற நேரத்தில் அவர்களுக்கு நபிகள்நாயகத்தினுடைய நினைவு வரவேண்டும்.

ஆரம்ப காலத்திலே முகம்மது நபியினுடைய கொள்கைகளை அங்குள்ள மக்கள் இலகுவிலே ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. அரேபிய பாலைவனத்திலே வசித்த மக்கள் 360 உருவங்களை ஆண்டவர்களாக வைத்து ஒரு நாளைக்கு ஒன்றாக வணங்கி வந்தனர் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட மக்களிடம் நபிகள் நாயகம் அவர்கள், '360 உருவங்களும் ஆண்டவனல்ல' என்று எடுத்துச் சொல்ல எப்படிப்பட்ட ஆற்றல் படைத்தவராக இருந்திருக்க வேண்டும்; எப்படிப்பட்ட ஆபத்துக்களையெல்லாம் அவர் ஏற்றிருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்தால் நமக்கும் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்வதிலே ஏற்படக் கூடிய பயம் ஓரளவு நீங்கும்.

பொது வாழ்விலே உள்ள சந்தேகங்களெல்லாம் நபிகளை நினைத்தால் பறக்கும். அவர் காலத்தில் ஏற்பட்ட ஆபத்துக்களை நினைத்தால் இக்காலத்து ஆபத்துக்கள் வெறும் துரும்புக்குச் சமானம் ஆகும்.

நபிகள் நாயகம் அவர்களுடைய வரலாறு வீரத்துக்கு ஒரு ஊற்று! சமுதாயத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு!

—ராயபுரம் மீலாத் விழாவில்

வேண்டாம் அற்புதங்கள்!

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் காயல் பட்டினத்துக்குச் சென்றிருந்தேன்; அப்பொழுது என்னுடன் திருப்பூர் மொய்தீனும், முகம்மது ஹுசேன் நயினர் அவர்களும் வந்திருந்தார்கள். நாங்கள் மூவரும் முகம்மது நபி விழாவிலே பேசினேம். அப்பொழுது அந்த விழாவிலே பேசிய ஒருவர் இஸ்லாமிய கதை ஒன்றைச் சொல்லி குர்ஆனுக்கும் அதற்கும் சம்பந்தப்படுத்தி விளக்கினர்.

யாரோ ஒருவர் காட்டுவழி செல்கையில், தனது செருப்பையும், கைத்தடியையும் மற்றொருவருக்குத் தானம் கொடுக்கும்படி ஆண்டவன் கட்டளையிட்டாராம்; உடனே அவர் தானம் கொடுத்துவிட்டாராம். அதன் பிறகே அவர் காட்டு வழியே செல்லுகையில் கள்வரிடம் சிக்கிக்கொண்டாராம்; அக்தச் சமயத்தில், முன்பு தான் தானம் கெடுத்த கைத்தடியும் செருப்பும் வந்து, கள்வர்களிடமிருந்து அவரைக் காப்பாற்றினவாம்.

அந்தக் கதையைக் கேட்டதும் எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. எனக்கு அருகிலிருந்த முகம்மது ஹுசேன் நயினர் அவர்களிடம் இக் கதையைப் பற்றிக் கேட்டேன்—'இந்தக் கதை குர்ஆனில் இருக்கிறதா? முகம்மது நபி இதைச் சொல்லியிருக்கிருரா?' என்று. அதற்கு அவர்—'அதெல்லாம் ஒன்றுமில்லை. குர்ஆனுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை; பிற்காலத்தில் யாராலோ கட்டிவிடப்பட்ட கட்டுக் கதை இது' என்ருர்.

அதன் பிறகு நான் பேசுகையில், இதைப் பற்றிக் குறிப்பிட்டு கட்டுக் கதை என்பதை விளக்கி, இப்படிப்பட்ட அற்புதங்களைக் காட்ட வேண்டுமென்பது ஐயன் கட்டளையல்ல என்பதையும் எடுத்துச் சொன்னேன்; காயல் பட்டினத்து

மக்கள் அதனலே என்னை எதிர்க்கவோ, கண்டிக்கவோ இல்லை; தமிழ்நாட்டிலே மிகப் பெரிய அரபுக் கல்லூரி ஒன்றும் இருக்கிறது. 15 ஆண்டுகளுக்கு முன்பே அங்குள்ள மக்கள் நான் எடுத்துச் சொன்ன உண்மையை உணர்ந்தார்கள் என்ருல், இன்று ஒப்ப மறுத்துவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இந்த நேரத்தில் இஸ்லாமிய சமூகத்தினருக்கு நான் ஒன்று சொல்லிக் கொள்வேன்! அற்புதங்களைக் காட்டி, அதனலே இஸ்லாம் சிறந்தது என்று நீங்கள் வாதாடினல் உங்களிடமுள்ள அற்புதங்களுக்கு அப்பன், பாட்டன் என்று சொல்லும்படியான அற்புதங்களெல்லாம், எங்களுடைய மதம் என்று வர்ணிக்கப்படும் இந்து மதத்திலே இருக்கின்றன.

உலகத்தில் இஸ்லாம் கடைசிவரை நிலைத்து நிற்கும் என்று ஜார்ஜ் பெர்னுட்ஷா கூறியதற்குக் காரணம், அந்த மதத்தில் அற்புதங்கள் குறைவு—அறிவுக் கருத்துக்கள் நிறைவு என்பதால்தான்!

அறிவுக்கொவ்வாத அற்புதக் கதைகள் இந்துக்களிடத்திலே ஏராளமுண்டு. நமது தாய்மார்களைக் கேட்டுப்பாருங்கள் 'பிரகலாதன் கதையை விடவா அற்புதக் கதை ஒன்று இருக்கிறது?' என்பார்களே! அற்புதங்களை விற்பனை செய்தவர்களே நாங்கள்—அற்புதங்களின் பிறப்பிடமே நாங்கள்—என்று சொல்லிக் கொள்ளும்படியான எண்ணற்ற கதைகளை இந்துக்கள் எடுத்துச் சொல்வார்கள்!

எனவே, அற்புதங்களைக் காட்டி இஸ்லாமிய கொள்கைக்கு அருமை பெருமை தேடாதீர்கள்! நபிகள் நாயகத்தின் அஞ்சா நெஞ்சுறுதியாலும், அவர் செய்த அறப்போரினலும்தான் இஸ்லாம் பரவியது.

அடிக்கடி ஆண்டவன் அவதாரம் எடுக்காமலே இஸ்லாத்திலே அரிய கருப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன!

இஸ்லாத்தின் மாண்பைப் போற்றுவதற்குக் காரணம் அந்த மார்க்கத்திலே 'இதை நம்பு' என்று ஆண்டவனல் கட்டளை பிறப்பிக்கப்படவில்லை; காரணம் கூறுவதால்தான் நம்பப்படுகிறது.

சீனவுக்குச் சென்றேனும் (தொலைவு கருதி) கல்வி கற்க வேண்டும் என்று அந்த மார்க்கத்திலே சொல்லப்படுகிறது.

இன்றைய இஸ்லாமியச் சமுதாயத்திலே பெரும்பாலோர் கல்வியறிவு பெருமலிருக்கின்றனர். அந்த மார்க்கத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற கட்டளை—கருப்பொருள்—கல்வியறிவு பரப்பப்பட வேண்டும் என்பது.

ஆண்டுக் கொருமுறை இத்தகைய விழா நடத்திக் காட்டி விடுவதிலே அருமையில்லை. எங்கள் மார்க்கம் இன்னின்ன வகையிலே சிலாக்கியமானது என்று பாமர மக்களிடம் எடுத்து சொல்லி, பிறகு அதை அவர்கள் மறந்தால், அதிலே இஸ்லாத்துக்கும் பெருமையில்லை.

இஸ்லாமியர்களிலேயே பலருக்கு இஸ்லாத்தின் வரலாறு தெரியாமலிருக்கலாம். தாஜ்மஹாலின் வரலாறு பலருக்குத் தெரியாது. தாஜ்மஹாலைப்பற்றி ஒரு இஸ்லாமியரிடம் கேட்டால், 'அது மிகப் பெரிய கட்டிடம்; அழகான கட்டிடம்; அதை எங்கள் ஆள்தான் கட்டினர்' என்பார்கள். எங்கள் ஆள் என்ருல் யார் என்று தெரிந்திருக்க முடியாது. அதைக் கட்டிய பாதுஷாவைப் பற்றித் தெரியாது; மார்க்கம் தெரிய வேண்டுமானல் அதன் வரலாறு தெரிய வேண்டும்—உலக வரலாறு தெரிந்திருக்க வேண்டும்.

—ராயபுரம் மீலாத் விழாவில்

சொல்லும் செயலும்!

மதத்தைப் பற்றிச் சில பொதுவான கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

யார் என்ன சொன்னலும், எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும் பொதுவாக மதத்தில் நம்பிக்கை குறைந்து வருகிறது. இதை நான் சொல்லுவதால் வருந்துவதில் பலனில்லை. சற்று ஆராயவேண்டும்.

இன்றைய சூழ்நிலை என்ன, நல்ல தத்துவம் ஏன் நம்பிக்கை இழக்கிறது? ஆராய வேண்டும். யார்பேரிலோ பழிபோடுவதிலே பயனில்லை; நம்பிக்கை குறைவதற்குக் காரணம் என்ன? கருத்துப் பரப்பும் இயந்திரம் பழுது பட்டிருக்கிறது.

அச்சடிக்கப்பட்ட ஒரு புத்தகத்தில் எல்லாம் சரியாக இருக்கிறது; எட்டாம் பக்கத்தில் மட்டும் கொஞ்சம் எழுத்துப் படாமலிருக்கிறது என்ருல் அதற்குக் காரணம் என்ன? அச்சுப் பொறியிலே பழுதா, அல்லது எழுத்துக் கோத்தவர் தவரு என்று பார்த்தால், எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றன, ஆனல் அச்சடிக்கையில் எல்லாப் பக்கமும் பட்டு, எட்டாம் பக்கத்தில் மட்டும் கொஞ்சம் படவில்லை. அதற்குக் காரணத்தைக் கண்டு பிடிக்க இயலவில்லை; ஆனலும் பழுது எங்கே இருக்கிறது? அதைக் கண்டு பிடித்தால்தான் சரியாக அச்சாகும்.

இதற்கு யாரைக் கேட்பது? ஜோதிடரையா கேட்பது? ஜோதிடரைக் கேட்டால் 'உனக்கு அஷ்டமத்திலே சனி. அதனலே எட்டாம் பக்கம் அச்சாகவில்லை' என்பார். அச்சுத்தொழில் நுணுக்கம் தெரிந்தவரிடம் சொன்னல், அவர் நன்கு ஆராய்ந்து பார்த்து விட்டுப் பிறகு சொல்லுவார்—

'எல்லாம் சரியாகத்தானிருக்கிறது; அச்சுப் பொறியிலோ, அச்சுக்கோத்ததிலோ பழுதில்லை; ஆனால் எட்டாம் பக்கம் அச்சாகும் இடத்தில் ஒரு நூலிழை எழுத்தின் உயரம் குறைந்திருக்கிறது. அதை உயர்த்தினால் சரியாக எழுத்துப் படும்' என்று கூறி கையாலே எழுத்தைத் தடவிப்பார்க்கச் சொல்லுவார். தடவிப் பார்த்தால் அப்பொழுது நமக்கு உண்மை விளங்கும். அதைப்போல பழுது இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்.

மார்க்கத் துறையிலுள்ள தூய கருத்துக்கள் சரியான வழியில் சரியான நோக்கத்தில் பரப்பப்பட வேண்டும்.

> கருத்தை உபதேசிப்பவர்கள் உபதேசித்தபடி நடந்து காட்ட வேண்டும். உபதேசிக்க என்று ஒரு கூட்டம், உபதேசித்தபடி நடப்பதற்கென்று ஒரு கூட்டம் இருக்கக் கூடாது.
>
> நபிகள் நாயகம் சொன்னார்; சொல்லியபடி நடக்கிறேன் என்று நடந்து காட்டினார். அப்படி மற்றவர்களும் நடந்து காட்டினால்தான் உலகத்தில் சாந்தி, சமாதானம், சமரசம் எல்லாம் நிலவும்.
>
> சொல்லுபவர்கள் உயர்ந்தவர்களாகவும், நடப்பவர்கள் கீழ்த்தரத்திலுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

இதோ இங்கு நான் பேசுகிறேன்—மேடையிலே நின்று பந்தலுக்குக் கீழிருந்து பேசுகிறேன்! நீங்கள் தரையிலே அமர்ந்து கேட்கிறீர்கள். இப்பொழுது மழைபெய்தால், 'மழையிலே நனைந்தாலும் பரவாயில்லை; நீங்கள் கேட்கத்தான் வேண்டும்' என்று நான் பேசினால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? எனக்குப் பந்தல் இருப்பதால் நான் பேச முடியும். நான் மட்டும் நனையாமல் நின்று கொண்டு உங்களை நனையச் சொன்னால் என்ன அர்த்தம்?

ஆறு லட்சம் ரூபாயை பாங்கியிலே போட்டுவிட்டு 6 ஆயிரம்ரூபாய் விலையுள்ள காடிலாக் காரிலே வந்து இறங்கி, 60 ரூபாயிலே பார்க்கர் பேனாவை வைத்துக் கொண்டு 6 ரூபாய் வாசனை செண்டை மேலே பூசிக் கொண்டு மேடையிலே ஏறி 'நபிகள் நாயகம் ஒட்டகத்தின் மேல் ஏறிதான் ஆங்காங்கு சென்று பிரசாரம் செய்தார்; நீங்களெல்லாம் ஒட்டகத்திலே தான் செல்ல வேண்டும்' என்று கூறினால், அதை எப்படி கேட்பவர்கள் மதிப்பார்கள்? அதனாலேதான் மார்க்கக் கட்டளையில் மதிப்பு குறைகிறது.

'காடிலாக்' கார் ஒரு சிலர்க்கும், கால்நடை பலருக்கும் என்ற நிலை குறைய வேண்டும்.

ஆண்டவன் எல்லா செல்வத்தையும் படைத்திருக்கிறான். எல்லாமிருந்தும் எதுவுமில்லாமலிருப்போர் பலர் இருக்கின்றனர். இருப்பதை இழக்க மனமில்லாமல் பெரும்பாலோர் இருக்கின்றனர்.

வைரமோதிரம் போட்டிருப்பவன் வைரத்தை பார்த்தறியாத ஏழையிடம், நீ வைரம் பார்க்க வேண்டுமானால் நீ குடியிருக்கும் குடிசையிலுள்ள ஓட்டையின் வழியாக மேல் நோக்கிப்பார்; வானத்தில் ஒளிவிடும் நட்சத்திரம் தெரியும்; அதைப்போலத்தான் இருக்கும் வைரம் என்று கூறினால் ஏழைஎன்ன சொல்லுவான்? 'என்ன திமிர் இவனுக்கு; இவன் வைரமோதிரம் போட்டுக் கொண்டு ஏழைக்கு நட்சத்திரத்தைக் காட்டுகிறானே' என்று சொல்ல மாட்டானா?

> எனவே, புரிகின்ற உபதேசம் நடைமுறையாக வளர்க்கப்பட வேண்டும். மனித ஒற்றுமைக்காக நபிகள் காட்டிய தூய கருத்துக்கள் நடைமுறைக்கு வர வேண்டும்.

திருத்தொண்டு

கடவுள் தத்துவத்தை யார் யார் பயன்படுத்துகிறார்கள்; எப்பொழுது பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆராய வேண்டும். எதையும் கண்டு மருளவோ, மயங்கவோ, அச்சப் படவோ கூடாது.

யார் என்ன சொன்னாலும், எவர் எப்படி ஆராய்ந்தாலும் அத்தனையையும் தாண்டி ஒரு மார்க்கம் இருக்குமானால் அதுதான் நிலைத்து நிற்க முடியும்.

சாமான்யர்களின் பேச்சுக்கே ஒரு மதம் நிற்காது என்றால் என்ன அர்த்தம்? நல்ல பொன் என்றால் அது எத்தனை முறை உரைத்துப் பார்த்தாலும் மாற்றுக் குறையாது நிற்கும். அதைப் போல இஸ்லாமிய மார்க்கம் யாரால் எப்படி எப்படி ஆராயப் பட்டாலும் நிற்கிறது.

எனவே எங்களை இந்த விழாவுக்குத் துணிவுடன் அழைத்துப் பேசச்செய்கிறார்கள். வேண்டுமானால் நவராத்திரி விழாவுக்கு எங்களைக் கூப்பிட்டுப் பார்க்கட்டுமே! அதற்குத் தைரியம் இருக்கவேண்டும். 'இதை நீ யார் நிறுத்துப் பார்க்க' என்று கூறக்கூடாது. யார் நிறுத்தாலும் எடை சரியாக இருந்தால்தான் அது சரியானதாக இருக்க முடியும்.

மதத்துறையில் ஆராயும் தன்மையின்றி எதையும் எளிதில் ஏற்றுக் கொள்ளும் நிலை வளர்ந்து வருகிறது. அந்த நிலை எப்பொழுதும் நீடித்து நிற்கும் என்று சொல்ல முடியாது.

ஒரு சிறு குழந்தை பெரியவர்களைப் பார்த்து வானத்தி லிருக்கின்ற நட்சத்திரத்தைக் காட்டி, 'அது என்ன?' என்று கேட்டால், குழந்தையின் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்க

அலுப்புக் கொள்கிறவர்கள், 'ஆகாயத்திலிருப்பவர்கள் சுருட்டு பிடிக்கும் நெருப்பின் வெளிச்சம்தான் நட்சத்திரம்' என்று அந்தக் குழந்தைக்குச் சொல்லிவைத்தால், அந்த நேரத்தில் அந்தக் குழந்தை அதை நம்பும். பிறகு அக் குழந்தை, கல்லூரியிலே படிக்கின்ற பருவத்தில் அதை எப்படி நம்பும்?

உலகம் முன்பு குழந்தைப் பருவத்திலிருந்தது. இப்பொழுது மனிதன் சந்திரமண்டலத்துக்குப் போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சிறுவராக இருந்தபோது தைத்த சொக்காயை பெரியவரான பிறகு எடுத்துப் போட்டால் உடம்புக்கு எப்படிப் பொருந்தும்?

> எனவே மார்க்கங்கள் நிலைக்க வேண்டுமானால், அவை மாண்புபெற வேண்டுமானால், அவை சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும்; நடைமுறைக்கு வர வேண்டும்.

குதிரை வண்டியிலேறும்போது 'எங்கு போக வேண்டும்?' என்று வண்டிக்காரன் கேட்க, 'மண்ணடிக்குப் போக வேண்டும்' என்று வண்டியிலே ஏறுபவர் சொல்கிறார். வண்டி மண்ணடி வந்ததும். வண்டியை நிறுத்தி இறங்கச் சொல்கிறான் வண்டிக்காரன், உடனே அவர், 'நான் இறங்க வேண்டிய இடம் இது அல்ல; அதோ தெரிகிறதே அந்தத் தெருக் கடைசிக்குப் போக வேண்டும்' என்று முத்தியாலுப் பேட்டைத் தெருவைக் காட்டினால், வண்டிக்காரன் என்ன சொல்வான்?

'கடவுளுக்குப் பொதுவாகச் சொல்லுங்கள்; நீங்கள் சொன்னது மண்ணடிதானே? இப்பொழுது முத்தியாலுப் பேட்டைத் தெருவைக் காட்டுகிறீர்களே? ஆகையினாலே இரண்டணா அதிகம் கொடுங்கள்' என்பான்.

வண்டியில் ஏறியவர் சொல்வார்—'நான் மண்ணடி என்று சொன்னேனே தவிர இந்த இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல

தமிழ் நூல் காப்பகம் 09142 606 001

வில்லை; நான் காட்டும் அந்தத் தெருவும் மண்ணடியைச் சேர்ந்ததுதான்; ஆகையினாலே, ஆண்டவனுக்குப் பயந்து பேசு; வீணாக அதிகக் காசு கேட்காதே' என்று சொல்வார்கள்.

இப்படி இருவரும் ஆண்டவன் பெயரை இழுப்பார்கள்.

இவர்கள் இருவரில் யார் பக்கம் கடவுள் இருப்பார்? வண்டியிலே ஏறிச் செல்பவர் கொஞ்சம் பணவசதியுள்ள வராக இருக்கலாம். ஏழை வண்டிக்காரர் பக்கம் இருக்கும் கடவுளைத்தான் நாங்கள் நம்புகிறோம். இதுதான் பகுத்தறி வாளரின் தன்மை.

பணக்காரன்—தன் பணத்தை மிச்சப் படுத்துவதற்காக ஆண்டவன் பெயரைப் பயன்படுத்துகிறான்; ஏழை—நியாயத் தைப் பெறுவதற்காகக் கடவுளை அழைக்கிறான்.

சுயநலக்காரன்—தன் சுரண்டலுக்குக் கடவுளைப் பயன் படுத்துகிறான்; ஏழை—தன் கஷ்டத்துக்குப் பரிகாரம் தேடக் கடவுளை நம்புகிறான்.

பணக்காரன் தன் இலாபக் கணக்கைச் சரிப்படுத்தினால் யாரும் 'கடவுள் வேண்டாம்' என்று கூறமாட்டார்கள்.

குர்ஆன் ஒரு தெளிவுரை; கடவுளைப் பற்றியும் சமுதாயத் தைப் பற்றியும் அதிலே பார் என்று அறுதியிட்டு சொல்லப் பட்டிருக்கின்றது.

நல்ல கோட்பாடுகளெல்லாம் அந்த நூலிலே மிகச் சுருக்கமாக தெளிவாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

நபிகள் நாயகம் அவர்களின் திருத்தொண்டினால் மிகச் சிறந்த முறையில் சமுதாயம் வளர்ந்திருக்கிறது என்பதை எண்ணி, இந்த விழாவிலே அவரது மாண்பினைப் போற்று கிறோம்.

—ராயபுரம் மீலாத் விழாவில்

சிறந்த மார்க்கம்

நபிகள் நாயகம் விழாவை நடத்துவதில் நான் ஒரு தனி மாற்றம் வேண்டுமென விரும்புகிறேன். இஸ்லாத்தின் நல்ல அறிவுரைகள் இஸ்லாத்தின் கொள்கையறியாத எல்லா மக்களுக்கும் பயன்படவேண்டும்; ஆகையினால், இவ்விழாவை நடத்துவதில் தனி மாற்றம் வேண்டுமென விரும்புகிறேன்; ஆனால், உண்மையில் என்னையும், நண்பர் செங்கல்வராயன் அவர்களையும் கூட்டி வைத்து இவ்விழாவை நடத்துவதால் நாங்கள் இஸ்லாத்தின் நல்ல கொள்கைகளை அறிந்திருப்பதை நீங்கள் அறிய முடியுமே தவிர, இஸ்லாத்தின் கொள்கை யறியா மக்கள் அறிய முடியாது. எவ்வளவுதான் சிறப்பாக இவ்விழாக்களில் என்னைக் கூட்டி வைத்துப் பேசச் சொன்னாலும் என்னை இஸ்லாத்தின் ஆதரவாளர்கள் பட்டியலில் சேர்த்துக் கொண்டாலும், மக்கள் இஸ்லாத்தின் நல்ல கருத்துக்களை அறியும்படி விழா நடத்துவதில் மாற்றம் வேண்டுமென விரும்புகிறேன்.

இஸ்லாத்தின் உரிய பண்புகள் இதற்கு முன் உலகுக்கு எவ்வளவு அவசரமாகத் தேவைப்பட்டதோ அதைவிட இப்பொழுது தத்துவக் காட்டுக்குள் ஒளி தேடி அலையும் இந்த உலகுக்கு மிக அவசரமாகத் தேவைப்படுகின்றன.

இஸ்லாம் என்பது ஒரு மதம் அல்ல. ஒரு சிறந்த மார்க்கம். இஸ்லாமிய மார்க்கத்தை உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் கொண்டாடுகிறார்கள்; இஸ்லாமிய மார்க்கம் சிறந்ததொரு மார்க்கமாக இருப்பதால் உலகில் உள்ள பெருங் குணவான்கள் இஸ்லாத்தை ஒரு மதமாகக் கொள்ளாமல் ஒரு மார்க்கமாகவே கருதுகின்றனர்.

நான் மதத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கும் இங்கு நடைபெறும் நபிகள் நாயகம் விழாவிற்கும் முரண்பாடு

இல்லை. இஸ்லாத்தை ஒரு மார்க்கமாகக் கருதி நான் இவ்விழாக்களில் கலந்து கொள்கிறேன். இவ்விழாவில் நான் கலந்து கொள்வது இதுதான் முதல் தடவை என்பது மட்டுமல்ல; இதுவே கடைசி தடவையுமல்ல.

இஸ்லாமிய மார்க்கம் ஏன் சிறந்ததெனப் போற்றப்படுகிறதென்றால், மனிதனுக்கு என்னென்ன ஐயப்பாடுகள் ஏற்படுகின்றனவோ அதையெல்லாம் நீக்கக் கூடிய வகையில் அதில் நல்ல கொள்கைகள் இருக்கின்றன. நபிகள் நாயகத்தின் போதனைகளில் ஒன்று, 'ஆண்டவனுக்கு இணை வைத்தல் ஆகாது' என்பதாகும். இந்தப் போதனையை நான் நெஞ்சம் நெக்குருக நெக்குருக எண்ணிப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்.

ஏன், நான் இந்தப்போதனையைச் சிறப்பாகக் கூறுகிறேன் என்றால், இப்போதனை மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகிறது. 'ஆண்டவனுக்கு இணைவைத்தல் ஆகாது—ஏன் இணை வைத்தல் ஆகாது? ஆண்டன் எப்படி இருக்கக்கூடும்?'—என்றெல்லாம் சிந்தனைக்கு வேலை கொடுத்து ஆண்டவன் இப்படியிருக்கக் கூடும் என்று சிந்தனை முடிவடைவதில்லை எனவேதான், பழந்தமிழ் மக்கள் 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'—பார்த்தவர் சொன்னதில்லை; சொன்னவர் பார்த்ததில்லை' என்று கூறியிருக்கிறார்கள்.

கடவுள் தன்மையின் தத்துவமே இதுதான். ஆண்டவனுக்கு இணை வைத்தால் ஆண்டவனுக்கு முன் ஒருவரை வைக்கவேண்டும். அந்த ஒருவர் யாராக இருக்கவேண்டும்? யாருக்குத் தெரியும்! அதனால்தான் ஆண்டவனுக்கு இணை வைத்தால் ஆகாது என்ற போதனையை நபிநாயகம் கூறியிருக்கின்றார். மற்ற மார்க்கத்தில் இணைவைத்துக் கூறிய காரணத்தால்தான், எங்களைப் போன்றவர்களுக்கு ஏராளமான மாற்சரியங்கள் தோன்றின.

இஸ்லாத்தில் எனக்கு மற்றொன்றும் பிடித்திருக்கிறது; அது, மனிதனை மனிதனாக ஆக்குவது; மனிதனை முழு மனித

னாக ஆக்குகிறது, இஸ்லாமிய மார்க்கம். மனிதனை—முடிந்தால் ஆண்டவனாக ஆக்கக்கூடிய வலிமை இஸ்லாமிய மார்க்கத்தில் இருக்கிறது.

கடவுள் தூதரை அனுப்பியதற்குக் காரணம்—தன்னை நேரடியாக 'நாங்கள்தான் கடவுள்' என்று கூறிய மக்களை நம்ப வைக்க முடியும்—ஆனாலும், தூதுவரை அனுப்பியதற்குக் காரணம், "நான் அனுப்பியதாகச் சொல்லு! சொன்னால்தான், மக்கள், 'கடவுள்தான் அனுப்பினாரா?' என்று சிந்தித்துப் பார்ப்பார்கள்—எண்ணிப் பார்ப்பார்கள் என்று. மனிதன் சிந்திக்க வேண்டியதின் அவசியத்தைக் கருதி, கடவுள் திருத்தூதரை அனுப்பியிருக்கிறார். எனவேதான், பழந்தமிழ் மக்கள் அறிவை ஆண்டவனே—ஆண்டவனே அறிவு என்று கூறியிருக்கிறார்கள்.

—சென்னை கடற்கரை மீலாத் விழாவில்

சமத்துவ மார்க்கம்

இஸ்லாத்தின் ஒரு சிறப்பு, இஸ்லாத்தில் யார் சேர்ந்தாலும் சாதியை மறைத்து விடுகிறது; முதுகுளத்தூரில் ஒருவர் தலையை ஒருவர் சீவிக்கொள்ளும் தேவர்—தாழ்த்தப்பட்ட மக்களானாலும் சரி, மற்றும் யார் சேர்ந்தாலும் சரி, சாதியை நீக்கிவிடுகிறது, இஸ்லாத்தின் கொள்கை. அதனால், அது என்னை மிகவும் ஈர்க்கக்கூடிய கொள்கையாக இருக்கிறது.

இதையெல்லாம் அறிந்துதான், எதையும் துருவித் துருவி ஆராயும் பண்பு படைத்த அறிஞர் பெர்னாட்ஷா அவர்கள், 'உலகில் கடைசிவரை நிலைத்திருக்கக் கூடிய மார்க்கம் இஸ்லாமிய மார்க்கம் ஒன்றுதான்' என்று எழுதியிருக்கிறார்.

நபிகள் நாயகத்தை மகான் என்று ஏன் கொண்டாடுகிறார்கள் என்றால்—1957-ம் ஆண்டில் சமுதாய ஒழிப்பு வேண்டும் என்பதை எடுத்துச் சொன்னால் எங்களை ஓடஓட விரட்டுகிறார்கள் என்றால், 1400 ஆண்டுகளுக்கு முன்பு, பல்வேறு தெய்வங்களை வணங்கிய மக்களிடம்; 'நீ வணங்கும் கடவுள் இதுவல்ல; நீ செல்லவேண்டிய கோயில் இதுவல்ல' என்று கூறியவரை விட்டு வைத்தார்களே அதுவம், அந்த மக்களிடம் தன் கொள்கையை நெஞ்சுறுதியோடு எடுத்துச் சொன்னதே அதுவும், அவரை 'மகான்' என்று கொண்டாடக் காரணம். இப்பொழுது நபிகள் கொடுத்த நெஞ்சுரம்தான் இப்பொழுது அவரது மார்க்கத்தைத் தழுவியிருப்பவர்களுக்கு இன்றும் இருக்கிறது என்றால் அது ஆச்சரியமில்லை.

மார்க்கம் என்பது மக்களை ஒன்றுபடுத்துவது—மக்களை அறிவுத் தெளிவு படுத்துவது—மக்களை ஒற்றுமைப்படுத்துவது—அரிய பந்தங்களை ஏற்படுத்துவது—நல்ல தேழைமையை வளர்ப்பது—சிறந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது.

அது, 'மதம்' எனச் சொன்னால், அது மக்களை மதமதப்பில் ஆழ்த்தும்; அதற்கு போலீஸ் தேவைப்படும். மார்க்க நெறியில் நின்றால் மக்கள் அன்பு வழியில் ஒன்றுபடுவார்கள்.

மதத்தின் பயன் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பது பற்றி நமக்குள் வேறுபாடு இருக்கலாம். ஆகையினாலே, யாராவது சிலர் நாஸ்திகர் என்றும், சிலர் ஆஸ்திகர் என்றும் கருதப்பட்டால் அந்தப் பட்டம் ஆஸ்திகர் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள், தங்களுக்கு அவர்களைப் பிடிக்காத காரணத்தால், அவர்களுக்கு இட்ட பெயர்தானே தவிர வேறொன்றுமில்லை. அதைத் தவிர நாஸ்திகம் என்பது இருந்ததுமில்லை; இனி இருக்க வேண்டிய அவசியமுமில்லை. அப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாங்கள், அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதை இப் புனித நாளில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் ஆஸ்திகம் என்பது இயற்கை; இயற்கைக்கு மாறுபட்டு யாரும் இருக்க மாட்டார்கள்.

இஸ்லாம் மார்க்கத்தின் மாண்புகளை வேறு நாடுகளில் மேலேயிருப்பவர்கள் கீழேயிருப்பவர்களுக்கு உபதேசம் செய்வார்கள்; ஆனால் நமது நாட்டில் அப்படியிருக்கக் கூடாது. நமது நாட்டைப் பொறுத்த வரையில் கீழேயிருப்பவர்கள் தான் மேலேயிருப்பவர்களுக்கு உபதேசம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் கடவுள் தன்மையை எல்லோரும் அறிந்தவர்கள் ஆவார்கள். ஏன் அவ்வாறு சொல்கிறேன் என்றால், புகைவண்டி நிலையத்திலிருந்து நாம் குதிரை வண்டியில் வீட்டுக்கு வருகிறோம். நாம் முதலில் இறங்கவேண்டிய இடத்தைச் சொல்லி, வண்டிக்காரனிடம் வாடகை பேசுகிறோம். வண்டிக்காரன் நாம் குறிப்பிட்ட தூரம் வந்ததும் அவன் தான் நினைத்ததைவிட தூரம் அதிகமாக இருப்பதாகக் கருதி வாடகையைக் கொஞ்சம் அதிகம் கேட்கிறான்; அப்பொழுது பலர் இயற்கையாகவே என்ன கூறுகிறார்கள்?

—"அப்பா கடவுளுக்குப் பொதுவாக நட!" என்கிறார்கள். ஆனால் உண்மையாகவே அதிக தூரம் வந்து நாம் வாடகை

யைக் குறைத்துக் கொடுத்தால், அப்பொழுது அவன், "ஐயா! கடவுளுக்கு பொதுவாக நடவுங்கள்" என்றால் அதை எத்தனை பேர் பின்பற்றுகிறோம்? உங்களை மனதார எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்—'கடவுளுக்குப் பொதுவாக' என்பதை எத்தனை பேர் பின்பற்றுகிறோம்?

ஆகையினாலேதான், நமது நாட்டைப் பொறுத்த வரையில் கீழேயிருப்பவர்கள் மேலேயிருப்பவர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்கிறேன்.

மதத்தின் மார்க்கத்தில் யாருக்கும் மாறுபாடு இருக்க முடியாது. ஆனால், மார்க்கம் நடைமுறையில் வரும்போது அது மக்களுக்குப் பயன்படவேண்டும். அதற்குச் சுற்றுச் சார்பும், சூழ்நிலையும் அமைய வேண்டும். சூழ்நிலையை மனிதன் உண்டாக்குகிறான். ஆனால் சுற்றுச் சார்பு எப்படி இருக்கிறதோ, அப்படியே—அதன் வழியே செல்பவர்கள் கொஞ்சம் சுற்றுச் சார்பு அறிந்தவர்கள். ஆனால் சுற்றுச் சார்புக்கு மாறாக நாம் நடந்தால் தனக்குத் தீமையை அளிக்கும் என்பதைத் தெளிவாக அறிந்தும், கெட்டிருக்கின்ற சுற்றுச் சார்புகளை அழித்து நல்ல சுற்றுச் சார்புகளை ஏற்படுத்துகிறானே அவனைத்தான் 'மகான்' என்று சொல்லுகின்றோம்.

ஆனால் அவர்கள் எப்பொழுதும் நமக்குக் கிடைப்பதில்லை. அவர்கள் கிடைக்கும்போது நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட மகான்களில் ஒருவர் நபிகள் நாயகம். அவரைப் போன்ற மகான்கள் நம்மிடையே அடிக்கடி தோன்றுவதில்லை. ஆகையினால் அத்தகையவரின் சிறந்த கருத்துக்களை நாட்டில் பரப்ப நல்ல சுற்றுச் சார்புகள் உருவாக வேண்டும். சுற்றுச் சார்பு நல்லமுறையில் அமைய மக்களிடத்திலே நல்ல அறிவுத் தெளிவும், அத்தெளிவு ஏற்பட நல்ல கல்விமுறையும், நல்ல கல்விமுறை ஏற்பட நல்ல ஆட்சியும், நல்ல ஆட்சிமுறை ஏற்படுவதற்கு நல்ல ஆட்சியாளர்களும் வேண்டும்; நல்ல ஆட்சியாளர்களை ஏற்படுத்த நல்லவர்களை வாழவிட வேண்டும்.

நபிகள் போதித்த இஸ்லாம் மார்க்கம் வைரம் போன்றது; நல்ல வைரத்தைப் பட்டை தீட்டி, அதைக் கையிலே மோதிரமாகவும் செய்து போட்டுக்கொள்ளலாம். காதில் கடுக்கனாகவும் அணிந்து கொள்ளலாம். அதே வைரத்தை விற்று, கிண்டி குதிரைப் பந்தயத்தில் வைத்தும் ஆடலாம். ஆனால் வைரத்தைப் பயன்படுத்துவதிலிருந்துதான், அந்தப் பயனின் தரத்தை அறிந்து கொள்ள முடியும். அதைப் போல இஸ்லாம் மார்க்கம் என்ற வைரம் யாருக்கு — எந்த இடத்திலே — எப்படி பயன்படுகிறது என்பதிலேதான் அதன் மாண்பு உணரப்படும். இதை எண்ணும்போது நல்லவர்கள் கிடைப்பது என்பது கூட எளிதாகி விடும். ஆனால் அவர்கள் சொல்லிச் சென்ற கருத்துக்களை பயன்படுத்துவதிலேதான் மதிப்பு உயரும்.

இஸ்லாத்தின் உயர்ந்த மார்க்கம் இன்று யாருக்கு பயன்படுகிறது? இதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆதிக்கக்காரர்களுக்குப் பயன்படுமானால்—ஏழையை ஐயோ என்று கதற வைப்பவர்களுக்குப் பயன்படுமானால் அதில்—இந்த உயரிய மார்க்கத்தின் பலன் இல்லை. இவ்வுயரிய மார்க்கம் அக்கிரமத்தை அழிக்கப் பயன்பட வேண்டும். உலகத்தில் நல்ல தோழமையை உண்டாக்குவதற்குப் பயன்படவேண்டும். என்றைக்கு இந்நோக்கங்களுக்கு இம் மார்க்கம் பயன்படுகிறதோ அன்றைக்குத்தான் மார்க்கத்தின் முழுப் பலன்களையும் அடைய முடியும்.

—சென்னை கடற்கரை மீலாத் விழாவில்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்

தத்துவக் காட்டிலே சிக்கித் தடுமாறிக் கொண்டிருக்கும் உலகுக்கு தக்கதோர் வழிகாட்டும் ஒளிவிளக்காக இஸ்லாத்தை நாங்கள் கருதுகிறோம்.

மதம் என்று சாதாரணமாக உணரப்படுவதை போன்ற தல்ல இஸ்லாமிய மதம். எனவேதான் இஸ்லாத்திலுள்ள மேலோர் இஸ்லாத்தை மதம் என்று அழைப்பதைவிட மார்க்கம் என்றே அழைக்கின்றனர். இஸ்லாத்திலுள்ள ஒளியும், அந்த ஒளியிலுள்ள மாண்பும் வரவேற்கத்தக்கது.

மனித சிந்தனை வளர்ச்சியுருத காலத்திலே மனிதர்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை நீக்கவே தூதர்கள் தோன்றினர்கள். நபிகள் நாயகம் இறுதி நபியாகத் தோன்றியதால் அவர்களுக்கு பின்னரும் பலர் நானும் நபிதான் என்று சொல்லி மக்களிடையே குழப்பத்தை உண்டு பண்ண முடியவில்லை.

ஆண்டவன் மனிதனுக்குச் சிந்தனையை அருளியதே அவனுடைய தன்மையை அறிந்துகொள்ளத்தான்.

இஸ்லாத்திலே இறைவனுக்கு இணைவைக்கக் கூடாது என்று கூறப்பட்டிருப்பதை நினைந்து நினைந்து மகிழ்ந்திருக்கிறேன். ஏனெனில் ஆண்டவனுக்கு ஒன்றை இணை வைப்பது என்ருல் அதைப் பற்றி முன்னரே அறிந்திருக்க வேண்டும்.

ஆண்டவனுக்கு இணைவைப்பதால்தான், அவனைக் காட்ட எட்டணு என்ற தரகு வேலையும் ஆரம்பமாகிறது. இஸ்லாமிய மார்க்கம், மனிதனைப் பூரண மனிதனுக்கத் தக்க மார்க்கமாய் விளங்குகிறது.

ஆண்டவன் தானுகத் தோன்றி உபதேசிக்காமல் தூதர்களை அனுப்பியதேன் என்ருல் மனிதர்களுக்கு வெறும்

நம்பிக்கையை யூட்டுவதற்கு மட்டுமல்லாமல் அவர்களுடைய ஐயங்களைத் தெளிவாக்கி அவர்கள் பின்பற்றுவதற்கு வழி காட்டிகளாகவே அனுப்பியிருக்கிருன். இஸ்லாமிய மார்க்கம் கூறும் ஆண்டவன்தான்; உருவத்திற்குள்ளே தன்னை அடக்கிக் கொள்ளாத ஆண்டவனுக இருக்கிருன். அந்த ஆண்டவனும் சிந்தித்து உணரத் தூண்டுகிருன்.

இஸ்லாத்தின் மிகச் சிறந்த மாண்பு அதன் சமுதாய அமைப்பாகும். சாதிப் பீடையை அதுஒழித்துக்கட்டுவதாகும். முதுகுளத்தூரிலே இன்று அடித்துக் கொண்டிருக்கும் ஹரிஜனும் தேவரும் அப்துல் சத்தாராகவோ, அப்துல் சமதாகவோ மாறிவிட்டால் இந்த வேற்றுமைகள் எல்லாம் மறைந்து விடுகின்றன.

இம்மாதிரியான கூட்டங்களிலே இஸ்லாமிய வரலாறு அறிந்தோர் வாயிலாக நபிகள் நாயகத்தின் வீர வரலாற்றை கேட்க விரும்புகிறேன். எங்களைப் போன்ருேரைப் பேசச் செய்து, இஸ்லாத்தைப் பற்றிய எங்கள் ஞானத்தைச் சோதிப்பதைவிட எங்களைப் போன்ருேரை கூட்டிவைத்து இஸ்லாமிய தத்துவ விளக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன்.

காட்டு மிராண்டி காலமான அக்காலத்தில்—1400 ஆண்டுகளுக்கு முன்னே நபிகள் நாயகம் அவர்கள் தன்னந்தனியாக—அக்காலத்து மக்கள் வணங்கிய தெய்வங்கள் பொய்யானவை என்றும் அவர்கள் சென்று வழிபட்டக் கோவில், இறைவனின் உண்மையான உறைவிடமல்ல என்றும் எடுத்துக் கூறித் திருத்தினர்கள் என்ருல் அதற்காகவாவது சுயமரியாதைக்காரர்கள் அவரை மகான் என்று கொண்டாடுவார்கள். அக்கால மக்கள் ஈடுபட்டிருந்த கோட்பாடுகளை யெல்லாம் இடித்துரைக்க எவ்வளவோ நெஞ்சுரம் வேண்டும். நபிகள் நாயகத்தின் நெஞ்சுரம் இறுதிவரையிலே கொஞ்சமும் மாருததாக இருந்தது. அது மாத்திரமல்ல. அந்த நெஞ்சுரத்தை இஸ்லாமியருடைய பரம்பரைச் சொத்தாக அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நெறி தமிழ் நாட்டில் பரவி இருந்தது. ஆனல் பாதகர்களாலும்—காதகர்களாலும் அந்த நெறி மறைக்கப்பட்டிருந்த நேரத்தில் இஸ்லாம் அந்த நெறியை எடுத்துரைத்தது. எனவே காணுமல் போன குழந்தையைத் தாய் பாசத்துடன் கட்டியணைப்பதைப் போன்றே தமிழகத்தில் இஸ்லாமிய கருத்துக்கள் தழுவப்பட்டன, இதைக் கண்டு மற்றவர்கள் பொருமைப்பட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்.

மார்க்கத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்து அதன் மாண்பும் உணரப்படுகிறது.

இஸ்லாம் சிறந்த மார்க்கம். அது உலகத்திலே, அக்கிர மத்தையும் அநியாயத்தையும் அடக்கப் பாடுபட வேண்டும்.

மேலே இருப்பவர்கள் கீழே இருப்பவர்களுக்கு உபதேசிப்ப தாக மார்க்கம் இருந்து வருகிறது. கீழே உள்ளவர்களால் மேலே உள்ளவர்களுக்கும் உபதேசிப்பதாக மார்க்கம் இருக்க வேண்டும்.

பிறரிடமிருந்து பணம் பறிக்கவோ, பேரம்பேசிப் பயனடையவோ அன்றி, அக்கிரமத்தை ஒழிக்க, மக்களி டையே அன்பை வளர்க்க மார்க்கம் பயன்படவேண்டும்.

எங்களை நாஸ்திகர்கள் எனக் குற்றஞ்சாட்டுகிருர்கள். ஆனல் உருவமற்ற ஒரு தெய்வத்தை நாங்கள் என்றும் மறந்ததில்லை. ஆஸ்திகர்கள் எனத் தம்மைத்தாமே அழைத் துக்கொள்வோர் தங்களுக்குப் பிடிக்காதவர்களுக்குச் சூட்டிய பட்டம்தான் 'நாஸ்திகர்கள்' என்பது. உண்மையிலேயே உலகத்தில் நாஸ்திகர்கள் என ஒரு கூட்டத்தார் இருந்த தில்லை. அப்படி ஒரு வேளை இருந்தாலும், நிச்சயமாக நாங்கள் அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்களல்ல.

ஆண்டவனை ஐயப்படும் அளவுக்கு ஈனப் பிறவிகளாக அந்த ஆண்டவனல் படைக்கப் பட்டவர்களல்ல நாங்கள் என்பதைத் தெளிவு படுத்துகிறேன்.

அறப்பணி

என்னுடைய பொதுவாழ்வில் எல்லா மதங்களின் ஆராய்ச்சியிலும்—அவற்றிலுள்ள குறைநிறைகளை ஓரளவு கண்டறிந்தவன். அரசியலில் ஈடுபாடு கொண்ட நான்—மத ஆராய்ச்சியில் கவனம் காட்ட முனைந்ததே சந்தர்ப்பத்தின் சந்திப்புக்களால் சமைந்ததுதான். என்னுடைய பொது வாழ்வின் துவக்க காலத்தில் நான் மேடையைத் தேடிப் பிடிக்க வேண்டியவனுயிருந்தேன். வலிய வரும் அழைப்பெல் லாம் பொதுவாக மதாச்சார மேடைகளாகவே இருந்தது. சிலசமயம் அம்மாதிரி மேடைகளில் நிர்ப்பந்தத்துக்காககூட ஏறுவதுண்டு. சிலநேரம் அதிலுள்ள குறைநிறைகளைக் கூறவும் ஏறுவதுண்டு. இந்த சந்தர்ப்பம், என்னை மத ஆராய்ச்சியில் வலியவே தள்ளிவிட்டது. ஒன்றினை அறிய, அதில் எழும் ஐயங்களுக்காக—மற்ருென்றை தேடிப்பிடித்து படிக்கும் ஆர்வம் ஏற்பட்டு—படிப்படியாக அம்மதங்களின் முக்கிய நூல்களைப் படித்து முடித்துவிடும் நிலைக்கே கொண்டு வந்து விட்டது.

எனக்கும் இஸ்லாத்துக்கும் ஏற்பட்ட பிணைப்பு—இந்த வகையில் ஏற்பட்ட பிணைப்பல்ல! நான் வசிக்கும் காஞ்சீபுரம் ஒலி முகம்மது பேட்டை இஸ்லாமிய நண்பர்களுடனும், மார்க்க பேரறிஞர்களான ஆலிம்களுடனும் என் இளமை முதல் உற்ற நண்பர்களாக நான் தொடர்பு கொண்டவன். இங்கு உற்ற நண்பர்கள் என்கிற போழ்து, குடும்பத்தோடு குடும்பமாய்க் கலந்து—சகோதர வாழ்க்கை நடத்தியவன் நான். இஸ்லாத்தைப் பற்றியும் அதன் இன்னிலக்கியமான, இறை மறை திருகுர்ஆனைப் பற்றியும், நான் அறிந்து கொள்ளும் வாய்ப்பு, என் இளமைக் காலத்திலேயே என் இதயத்தில் இடம் பிடித்து விட்டது. திருக்குறளை நான் தெரிந்து கொண்ட காலத்திலேயே திருகுர்ஆனையும் நான்

தெரிந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றிருந்தேன் என்று நான் துணிந்து சொல்வதில் பெருமை கொள்கிறேன்.

என்னுடைய பொதுவாழ்வு சுடர்விட என்னுடைய இதயமூச்சின் இலட்சிய மேடையான திராவிடக் கழக மேடையுடன்—நபிகள் நாயக மீலாது மேடையும் எனக்குக் கைகொடுத்ததை நான் மறந்து விடமுடியாது. ஏறத்தாழ முந்நூற்றுக்கதிகமான மீலாது மேடைகளில் நான் பேசியிருக்கிறேன். நானும்—எனது கொள்கையும் சொல்லிவந்த—சமுதாய சீர்திருத்த பிரச்சார பலத்துக்கு—பெருமான் நபிகள் நாயகத்தின் ஏகதெய்வக் கொள்கை எங்கட்கு பெரிதும் பிரச்சாரத் துணை நின்றது. கல்லையும் மண்ணையும் பூசிக்காதீர்; கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் உண்டு—மனிதனால் படைக்கப்பட்ட கடவுள் இல்லை என்று நபிகள் நாயகம் வலியுறுத்திய அதே கொள்கையைக் கொண்டிருந்த—எங்கள் இலட்சியப்பணி, மீலாது மேடையின் மூலம்—சுடர்விட நல்ல வாய்ப்பு இருந்தது.

ஏகதெய்வக் கொள்கையை—ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் உண்மை தாத்பரியத்தை—மக்களை ஏற்கச் செய்ய எவ்வளவோ பிரச்சாரம் தொடுத்தும்—முழுப்பயனும் எட்டமுடியாமல் உள்ளம் வெதும்பும் நம்முடைய பிரச்சாரத்தையும்—1400 ஆண்டுகட்கு முன்பு எந்தவித நவயுக பிரச்சார சாதனமும் இல்லாத அந்த நாட்களில்—திரும்பும் திசை தோறும் கடவுளின் சிலை வடித்து தினமொரு இறைவனை உண்டுசெய்த அறிவாற்றலற்ற அந்த மக்களை—நபிகள் நாயகத்தின் 23 வருட பிரச்சார பலம்—எத்துணை வெற்றிக்கு இழுத்து வந்து, ஒரே இறை—ஒரே மறை என்ற கருத்தை உள்ளத்தால் ஒத்துக்கொள்ளச் செய்து, அதுவும் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி, பண்புடன் வாழச் செய்திருக்கிறது என்றால்—அந்த மனிதப் புனிதரின் நாவண்மைக்கிருந்த நல்ல மதிப்பீட்டை—மகத்துவத்தை எண்ணிப் பூரித்து நன்னயத்திற்கு துணைபோக வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இத்துணை மகத்துவம் அந்த மாநபிக்கு இருக்கக் காரணமே—அந்த பெருமகன் தன் உயிரினும் மேலாக கட்டிக் காத்துவந்த பொறுமையும், சொல்லும், செயலும் இணைந்த வாழ்வும்—நடைமுறை வாழ்க்கையில் தடையின்றிச் செல்லத் துணை நின்ற சட்டமும், தன்னையும் தன்னை பின்பற்றுவோருள் ஒருவராக்கி சொன்னதோடல்லாமல் செய்துகாட்டும் செம்மலாகவே இருந்ததும் மூல முதல் காரணமாகும்! மற்றெல்லா மதங்களிடையேயும் இல்லாதிருக்கும் இணையற்ற மதிப்பு—அதன் சட்டத்திட்டங்கள்—மனிதனின் நடைமுறை வாழ்க்கைக் கேற்ற நல் அமைப்பாகும். நபிகள் நாயகத்தின் வாழ்வும் வாக்கும் நிரம்பிய ஹதீசும் இஸ்லாத்தின் இணையற்ற இலட்சிய பொக்கிஷமான—இறைமறை திருக்குர்ஆனும் மனிதன் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கும் நடைமுறை வழிகளைக் கடைப்பிடிக்க வலியுறுத்துகின்றன. இது இஸ்லாத்தின் வளர்ச்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய தூண்டுகோலாகும்!

எழுச்சி இதயம் என்பது அறிவைத் தேடி அலையும் ஆற்றல் உள்ளதாக அமைதல் வேண்டும். நான் இதற்கு முன்னும் சொல்லியிருக்கிறேன்—இப்போதும் சொல்கிறேன். நான் ஒழி கைலி கட்டாத முஸ்லிம்—சிலுவை போடாத கிறிஸ்தவன்—திருநீறு அணியாத ஹிந்து. நல்லவை எங்கு தென்படுகிறதோ அங்கெல்லாம் நான் பழத்தோட்டத்தை நாடி பறவையினங்கள் பறந்தோடுவது போல, ஏற்புடைய என் இதயத்துக்கு இனியவைகளை, வல்லவைகளை—அவை இருக்கும் இடம் பற்றி கவலைப்படாமல் எடுத்துவந்து விடுவதுண்டு.

அப்படி இஸ்லாத்தில் நான் எடுத்துத் கொண்டவைகளுள் மிக முக்கியமானது பொறுமை. அந்தப் பொறுமையின் உரிமையை நான் மிகப் பெருமையாக அனுபவித்து வருகின்றேன். வாய்மையில், வளர்க்கும் மனத்தூய்மையில் சிறக்கும் பொறுமை ஒன்றில்தான் உலகம் அளப்பரிய சாதனைகளைக் காணமுடிந்தது, அந்த சாதனைகள் இஸ்லாமிய

வரலாறெங்கும் வளர்ந்து நிற்பதையும் நம்மால் பார்க்க முடிகின்றது. வாளேந்தி, வன்சமர்புரிந்து சாதிக்கமுடியாத சாதனைகளைக்கூட நபிகள் பிரானின் இன்சொல்லும், புன் முறுவலும் தனக்கே உரிய தனித்த ஆயுதமான பொறுமை யினாலும் வெற்றி கொண்டு இருக்கிற சக்தி அண்ணலின்பால் எனக்கு அளப்பரிய பக்தியை உண்டாக்கி விட்டது.

இஸ்லாம் என்பது ஒரு பலாப்பழத்துக்கு ஒப்பாகும்; இத்துணை சம்பிரதாய சடங்குகள் கொண்டதா இஸ்லாம் என்று அதனைப்பற்றி புரிந்து கொள்ள அஞ்சுபவர்களால், அதன் உள்புகுந்து உயர் நோக்கறிய முனையாதவர்களால் இஸ்லாத்தைப் புரிந்துகொள்ள முடியாது. பலாப்பழத்தின் மேலுள்ள முள் குத்துமே என்று அஞ்சுபவர்களுக்கு அதன் உள்ளே உள்ள சுவையான கனிகளை உண்ணும் வாய்ப்பு எப்படி கிடைக்கும்? அதே போன்றே இஸ்லாம். சம்பிரதாயம் என்ற முள்கூட கையிலே குத்தி, குருதியைக் கொண்டுவந்து விடுவதில்லை. தெரிந்து கொள்ளும் ஆவலுடன் உள்புகுந்து அறிந்தால், தோல் நீக்கிய கனி கிடைப்பது போல், நல்ல சுவையுள்ள கனி கிடைக்கும் சுந்தர மார்க்கம் இஸ்லாமாகும்.

பெருமான் நபிகள் இஸ்லாத்தின் இனிய சங்க நாதத்தை உலகின் நாலா பக்கமும் ஒலிக்கச் செய்வதற்குப் பட்ட துயர்கள், தொட்ட தொல்லைகள், தியாகம் பலகண்ட தியாகத் தழும்புகள் கொஞ்சம் நஞ்சமல்ல.

அண்ணல் நபிகள் நாயகத்தின் அறப்பணி—அகிலத்தை தரமுடையதாக்கவும், திறமுடையதாக்கவும் கிடைத்த திருப்பணி. இப்பணியை எண்ணி பூரிக்க நாம் ஒவ்வொரு வரும் கடமைப்பட்டவர்களாவோம்.

—தஞ்சையிலுள்ள அபிவையில் அண்ணா

அண்ணாவின் எண்ணங்கள்

நபிகள் நாயகம் சொன்னபடி செய்து காட்டினார்கள் மனித ஒற்றுமைக்காக நபிகள் பெருமான் கூறிய கருத்துக்கள் நடைமுறைக்கு வரவேண்டும்.

இருளில் ஒளி

இருட்டுக் காலத்தில் நல்ல ஒளியைத் தந்தார்கள் முகம்மது நபி.

அஞ்சா நெஞ்சம்

நபிகள் நாயகம் அவர்களுடைய அஞ்சா நெஞ்சுறுதி யாலும் அவர்கள் செய்த அறப்போரினாலும்தான் இஸ்லாம் பரவியது.

மாற்றுக் குறையாத பொன்

நல்ல பொன் என்றால் அது எத்தனை முறை உரைத்துப் பார்த்தாலும் அதன் மாற்றுக் குறையாது நிற்கும். அதைப் போல் இஸ்லாமிய மார்க்கம் யாரால் எப்படி எப்படி ஆராயப் பட்டாலும் நிற்கிறது.

மார்க்கம்

மார்க்கங்கள் நிலைத்திருக்க வேண்டுமானால், மாண்பு பெறவேண்டுமானால், அவை சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும். நடைமுறைக்கு வரவேண்டும்.

உலக இறுதிவரை

உலகத்திலே கடைசிவரையில் இஸ்லாம் நிலைத்து நிற்கும் என்று ஜார்ஜ் பெர்னாட்ஷா கூறியதற்குக் காரணம், அந்த

மார்க்கத்தில் அற்புதங்கள் குறைவு. அறிவுக் கருத்துக்கள் நிறைவு என்பதுதான்.

குர்ஆன்

குர்ஆன் ஒரு தெளிவுரை. நல்ல கோட்பாடுகளெல்லாம் அந்த நூலிலே மிகச் சுருக்கமாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

கடமை வீரர்

கண்மூடிப் பழக்கங்களை மண்மூடச் செய்து, காட்டு மிராண்டித் தன்மையினரை உயர்ந்த சமுதாயமாய் உருவாக்கி நெருக்கடியான நேரங்களிலும் இலட்சியங்களை நிறைவேற்றத் தவருத கடமை வீரர் நபிகள் நாயகம்.

வழிகாட்டி

எந்நெறியாக இருந்தாலும், எத்தகைய மார்க்கமாக இருந்தாலும் மனித சமுதாயத்திற்கேற்ற நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதாக இருக்க வேண்டும். முஸ்லிம் மார்க்கம் எல்லைக் கோட்டைக் கடந்து, மற்ற பிற பாகுபாடுகளைக் கடந்து மக்களைக் கவர்ந்திருக்கிறதென்ருல், மனித சமுதாய முன்னேற்றத்திற்கு, நல்வாழ்க்கைக்கு உயர்ந்த வழிமுறையைக் காட்டியிருப்பதுதான்.

இலக்கணம்

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும் பண்டைத் தமிழ்க் கோட்பாட்டுக்கு முழு இலக்கணமாய் விளங்குவது இஸ்லாமே!

விடை

ஒரே இனம், ஒரே மறை, ஒரே முறை, ஒரே குலம், ஒரே வணக்கம் இவற்றைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டேன். இஸ்லாம் ஒன்றைத் தவிர வேறெதுவும் எனக்கு விடை தரவில்லை.

மதம்

மனிதனுக்கு அப்பாற்பட்டு மதம் இருக்கிறது. மனிதனின் பிரச்னைகளைத் தீர்க்கவல்ல, வல்லமை மிக்கதாக அது இருக்க வேண்டும். ஒழுக்கம், இலட்சியம், வாழ்க்கை, நெறிமுறை ஆகியவற்றை, இஸ்லாம் போல், மதம் அமைத்துத்தருமாளுல் அந்த மதத்தைத்தான் நான் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்வேன். பின்பற்றுவேன். ஏற்றத் தாழ்வுகள், தீண்டாமை போன்ற ஏற்றுக் கொள்ள முடியாததை மதத்தின் கோட்பாடு என்ருல், நான் அந்த மதத்தின் முதல் விரோதி யாவேன்.

முஸ்லிம்

கைலியையும் தொப்பியையும் அணிந்து கொள்வதால் மட்டும் ஒருவன் சரியான முஸ்லிமாக ஆகிவிட முடியாது. நபிகள் நாயகம் அன்பை போதிக்கச் சொன்ஞர். நானும் அன்பைப் போதிக்கின்றேன். அவர் சகோதரத்துவத்தை வளர்த்தார். நானும் சகோதரத்துவத்தை வளர்க்கிறேன். அவர் அறிவே ஆண்டவன் என்ருர். நானும் அக் கொள்கையுடையவன். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ருர் நபிகள் நாயகம். அதையே நானும் நீண்டகாலமாகப் போதித்து வருகிறேன். ஆகவே, முஸ்லிமுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்?

கருணை நபி பற்றி கலைஞர்

ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் அதுவும் அராபிய நாட்டில், மிக காட்டுமிராண்டித்தனம் கோலோச்சிய அந்த நேரத்தில் ஒரு மனிதர் ஆயிரக்கணக்கான தெய்வங்களை வழிபட்ட மக்களுக்கு மத்தியில் நின்று புரட்சிகரமான சில கொள்கைகளைச் சொல்லி, அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு யாராவது கிடைப்பார்களா? என்ற சந்தேகத் திற்கிடையே, அதைச் சொல்லத் தொடங்கி, முதலில் அவருடைய கொள்கையை ஏற்றுக்கொண்டவர் அவருடைய துணைவியார் கதீஜா அம்மையார் என்ற அளவில் முதலில் அவர் ஏற்றுக்கொண்டு, பிறகு விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்குத்தான் அவருடைய வழியை பின்பற்றுகிறவர்கள் என்று தொடங்கி, இன்றைய தினம் அகிலம் முழுவதும் ஈடு இணையற்று பெரும் இயக்கமாக இஸ்லாமிய மார்க்கம் பரவி யிருக்கிறதென்றால் 'ஐயோ, இதை யாரும் ஏற்றுக்கொள்ள வில்லையே, நம்முடைய துணைவியார் மட்டும்தானே ஏற்றுக் கொள்ள வந்திருக்கிறார்' என்ற சோர்வு அவருக்கு வந்திருக்கு மேயானால் அந்தக் கொள்கைகள் இறுதியாக ஆக்கப்பட் டிருக்கும்; இந்த அளவிற்கு வளர்ந்திருக்க இயலாது.

நபிகள் நாயகம் அவர்கள் உலகத்தைத் திருத்த முன் வந்தார்; உலக மக்களைத் திருத்த முன்வந்தார்; காட்டு மிராண்டித்தனத்தில் உழன்றவர்களைத் திருத்த முன்வந்தார்; எதிர்ப்புகளுக்கிடையே சில காரியங்களைச் செய்தார்; வாளோடு வாள் மோதுகின்ற போராட்டங்களுக்கிடையே சில காரியங்களைச் செய்தார்; சில நேரங்களில் எதிரிகளால் ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடக்கூடிய சூழ்நிலையிலும் சில காரியங்களை அவர் துணிவோடு செய்ய முன்வந்தார்.

அந்தக் காலத்தில் அராபிய நாட்டு நிலைமை எப்படி இருந்தது என்றால், பயணம் செல்கின்ற நேரத்தில் கூட

பயணிகள் தங்களுடைய பயணத்தின் போது நான்கு கற்களை எடுத்துச் செல்வார்களாம்; அதற்குக் காரணம் வழியில் சமையல் செய்ய மூன்று கற்களை வைத்து அதன்மீது பாத்திரங்களை வைத்து சமையல் செய்வார்களாம். நான்காவது கல் எதற்காக என்றால், ஆண்டவன் என்று அந்தக் கல்லை வணங்குவதற்காகவாம்; இந்த அளவிற்கு கல்லில் கடவுளை வணங்க, இறைவனைக் காண, சிலையில் இறைவன் இருக்கிறான் என்ற உருவ வழிபாட்டில் அன்றைக் கே தங்களை ஆட்படுத்திக் கொண்டிருந்த உன்மத்தம் பிடித்த ஒரு நிலையை, தாங்கள் உருவாக்கிய ஒரு மாபெரும் புரட்சி யால் தகர்த்துக் காட்டி ஒன்றே இறைவன், அந்த இறைவன் இட்டவழி அறவழி, அன்புவழி, அந்த வழியை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்கின்ற மார்க்க போதனையைச் செய்த மக்கள் சமுதாயத்தில் பெரும்பகுதியை தன்பால் ஈர்த்த மகத்தான சக்திவாய்ந்த மனிதர்தான் நபிகள் நாயகம் அவர்கள்.

செம்மையான வாழ்வு :

நபிகள் நாயகம் மற்றவர்களைத் திருத்துவதற்கு முன்பு தன்னைத் திருத்திக் கொண்டார் என்பதற்கு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உண்டு. இன்று நாட்டிலே பார்க்கிறோம் - பல பேரை; தங்களைத் திருத்திக் கொள்ள வக்கற்றவர்கள் - வகையற்றவர்கள் மற்றவர்களைக் குற்றம் சொல்லுவதும் - மற்றவர்களைத் திருத்திக்கொள் - திருத்திக்கொள் என்பதும், இன்றைக்கு வழக்கமாக ஆகிவிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறை எந்த அளவுக்குச் செம்மையாக அமைந்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அப்படிப்பட்ட ஒப்பற்ற மாமனிதர் - இறைவனுடைய நிலை உருவத்திலேயில்லை; அது அவரவர்களுடைய அபிமானத்திலே இருக்கிறது. உள்ளத்தின் கருணையிலே இருக்கிறது - உள்ளம் பொழிகின்ற அன்பிலே இருக்கிறது -

என்கிற உயரிய கருத்தை உலகுக்கு வழங்கிய உத்தமர் - அவருடைய வழிநின்று இன்றைக்கு நடை போட்டுக் கொண்டிருக்கின்ற இஸ்லாமிய மார்க்கம், அந்த மார்க்கத்தில்- அந்த வழியில் மக்களை நடத்திச் செல்வதற்காக நாட்டில் தோன்றியிருக்கிற மார்க்கத் தலைவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். இவர்கள் இந்தச் சமுதாயம் வாழ - இந்த மார்க்கத்துக்கு வந்த பேராபத்துக்களைக் களைய எவ்வளவு அரும்பாடு பட்டார்கள் - இன்றைக்கும் கஷ்டங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் - என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அண்ணல் நபி பற்றி ஆதீனம்

இஸ்லாமிய மார்க்கத்தின் ஏகத்துவக் கொள்கையையும் அதனைப் பின்பற்றி ஒழுகுவதால் மனித சமுதாயத்திற்கு ஏற்படும் அளப்பரிய நன்மைகளைப் பற்றியும் முஹம்மது நபி (ஸல்—அம்) அவர்கள் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார்கள். பெருமானாரைப் பின்பற்றுவதிலே பெருமையுண்டு; உண்மையுண்டு; எண்ணிறந்த நன்மை உண்டு. கடவுள் கொள்கையில் ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தினார்; சமயக் கொள்கையில் தெளிவையும் எளிமையையும் நிலை நிறுத்தினார். இது எப்படி முடிந்தது. அவரால் என்றால் அல்லாஹ்வின் பேரருளால் அவருக்கு திருக்குர்ஆன் வேதம் அருளப்பட்டது.

அல்லாஹ்வின் திருநாமங்களைத் தினந்தோறும், தொழுகையின் ஒவ்வொரு வேளையிலும் உச்சரிக்கவேண்டும் என்ற நியதி இஸ்லாத்தில் இருப்பது மிகச் சிறப்பானதாகும். சுப்ஹானல்லாஹ் - இறைவன் மிகவும் தூய்மையானவன்! அல்ஹம்துலில்லாஹ் - இறைவனுக்கே புகழனைத்தும்! அல்லாஹு அக்பர் - இறைவனே மிகப் பெரியவன்! —இப்பேர்ப்பட்ட திருவாக்கியங்களை உச்சாடனம் செய்வதால் மனம், மொழி, மெய் தூய்மையாகின்றன.

* * *

இஸ்லாம் மதமல்ல; மனிதனை நெறிப்படுத்துகின்ற மார்க்கம். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவன் முஸ்லீம். முஸ்லிமாகப் பெயரளவில் இருப்பதில் பயனில்லை. முஸ்லிம்கள் தங்கள் மார்க்கமாகிய இஸ்லாத்தில் பற்றுடனும் பாசத்துடனும் இருக்க வேண்டும். தங்களின் கலாசாரத்தின்படி நடக்க வேண்டும். அஸ்ஸலாமு அலைக்கும் என்று ஒருவருக்கொருவர் முகமன் கூறி வாழ்த்துத் தெரிவிப்பது இஸ்லாமிய மரபு என்றால், அதைக்கூறி, வழக்கத்தில் கொண்டு வர வேண்டும். இறைவன் ஒருவன் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளோம். அந்த ஒரே இறைவனை நான் சிவன் என்று போற்றுகிறேன். என் முஸ்லீம் சகோதரர்கள் "அல்லாஹ்" என்று ஆராதிக்கிறார்கள். அல்லாஹ்விற்கு உருவமில்லை; விக்கிரகமில்லை. எல்லாவற்றையும் படைத்துப் பரிபாலித்துப் பக்குவப் படுத்துகின்ற பரம் பொருள் தான் அல்லாஹ் என்கின்றார்கள். இந்தத் தத்துவம் தமிழர்களாகிய நமக்குப் புதியதல்ல; பொருந்தாததுமல்ல; புரட்சிகரமானதுமல்ல. நாம் தத்துவமாக்கி வைத்திருப்பதை முஸ்லீம்கள் நடைமுறைப் படுத்தி வருகிறார்கள்.

* * *

இறைவனைப்பற்றி, எவ்விதக் குழப்பத்துக்கும் இடமின்றி, திருக்குர்ஆன் எவ்விதம் தெளிவாகக் கூறியுள்ளதோ, அவ்விதமே, எந்த ஒரு பிரச்சனையைப் பற்றியும், மனித சமுதாய வாழ்க்கை முறைபற்றியும், ஷரீஅத் சட்டங்கள் மிகத் தெளிவாக உள்ளன. இதன் காரணமாகவே இஸ்லாம் மார்க்கம் உலகமெல்லாம் பரவக் கூடியதாக வுள்ளது. ஆதலால்தான் நாமும் தெளிவாகக் கூறுகிறோம். "ஒரு காலம் வரப்போகிறது! அந்தக் காலத்திலே அகில உலகத்திலும் உள்ள மக்களின் ஒவ்வொரு வீடுகளிலும் லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி என்ற கலிமா ஓதப்படப் போவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது."

* * *

அறிஞர்கள் போற்றும் பெருமானார்

முகம்மது நபியின் வெற்றிக்கு முதல் காரணம், அவர்கள் கொண்டிருந்த உறுதியும் ஊக்கமும். இத்தகைய உறுதி அந்தக் காலச் சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று. இரண்டாவது காரணம், இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும் சகோதரத்துவமுமாகும்.

—ஜவஹர்லால் நேரு

துவேஷம் என்னும் கருமேகக் கூட்டத்தை விலக்கிவிட்டு உண்மையென்னும் கதிரவன் ஒளிபரப்பும் நன்னாள் ஒன்று வரலாம். அப்போது மேல் நாட்டு ஆசிரியர்கள், "முகம்மது ஒரு பெரிய சரித்திர நாயகர்" என்று கூறுவதோடு இப்போது நிறுத்திக் கொள்கிறார்களே, அப்படியின்றி, அதற்கப்பால் சென்று அவர்களுடைய வாழ்க்கையை அணுகி ஆராய்ந்து மனிதத்துவத்தின் வரலாறு என்ற பொன்னேடுகளில் நபிகள் நாயகம் அவர்களுக்குரிய இடத்தை அளிப்பார்கள்.

—எஸ்.எச். லீடர்

இறுதி மூச்சுவரை ஏகத்துவத்தை, ஒருவனே தேவன் என்பதை, பிரசாரம் செய்து, அசைக்க முடியாத இறை நம்பிக்கையுடன் இருந்து, தாமே இறைவனின் தீர்க்கதரிசி என்ற உள்ளுணர்வுடன் உரிமை கொண்டாடிய முகம்மது நபி அவர்களின் நபித்துவத்தை எவரே மறுக்க முடியும்?

—வாஷிங்டன் இர்விங்

நபிகள் நாயகம் தோற்றுவித்த தெய்வத் தன்மை பொருந்திய புனிதமான அரசாங்கம் முற்றமுற்ற ஜனநாயகக் கொள்கையை மேற்கொண்டதாகும், மனித குலம் முழுவதும் பின் பற்றத்தக்க உயரிய கோட்பாடுகளை உடையது நபிகள் நாயகம் கொண்டு வந்த இஸ்லாம். அனைத்தையும் உள்ளடக்கியது இஸ்லாம். அகிலமே ஏற்றுக் கொள்ளக் கூடியது. அண்ணல் நபியின் எளிய வாழ்க்கை அவருடைய மனிதத் தன்மையை தெளிவாக்கியுள்ளது.

—டாக்டர் ஜான்சன்

முகம்மது நபியின் நற்பண்புகள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றிய அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு விடும் என்று எதிர்பார்க்கிறேன்.

—பெர்னாட்ஷா

திருக்குர்ஆனுக்கும் தூதர் முகம்மது அவர்களுக்கும் என் விசுவாசத்தை வழங்குகிறேன். குர்ஆனின் கொள்கைக்கு இணங்க ஒரேவிதமான ஆட்சியை உலகெங்கும் நிறுவக்கூடிய காலம் வெகுதூரத்தில் இல்லை.

—நெப்போலியன்

இஸ்லாத்தின் நிறுவனருடையதைக்காட்டிலும் அதிக ஆச்சரியம் தரக்கூடிய வாழ்க்கை முறை வரலாற்றிலே வேறெங்கும் இல்லை. அவரைப்போல் உலகத்தின் தலைவிதியில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்திய மனிதர்களைக் காணுதலும் அரிது.

—ஜி.ஜி. கெல்லட்

சர்வசக்தியும் படைத்த இறைவன் தனக்குத் துணையாக நிற்கிறான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை நபிகள் நாயகம் அவர்களுக்கு இல்லாதிருந்தால் இவ்வளவு பிரம்மாண்டமான சாதனைகளை அவர் சாதித்திருக்க முடியாது.

—வில்லியம் மூர்

09142
நகர், விருத்தாசலம் - 606

ஆட்சி புரியும் அமைச்சர்கள் நபிபெருமான் வகுத்த சீர்திருத்தங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

—காந்திஜி

நபிகள் நாயகம் இவ்வுலகில் மக்களுக்குப் புரிந்த போதனைகள் அனைத்தும் உண்மை பொதிந்தவை. கருத் தாழம் மிக்கவை. விசுவாசம் கொள்ளத்தக்க வேதம் ஒன்றிருந்தால் அது நபிகள் நாயகத்துக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனேயாகும்.

—தாமஸ்கார்லைல்

நாகரிகம் முதிர்ந்த இந்நாளில்கூட மக்களைச் சீர்திருத்த முனைகிறவர்கள் படுகிற பாட்டைப் பார்க்கும்போது, பல நூற்றுண்டுகளுக்குமுன் அநாகரிகத்தில் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் முகம்மது நபி அவர்கள் புரிந்த சாதனைகளும், சீர்த்திருத்தங்களும் முரடர்களுக்கும் சகிப்புத் தன்மையும் நேர்மையையும் வழங்கி, அவர்களை மெய்யான வாழ்க்கையின் பக்கம் இழுத்து வந்து வெற்றியை நிலைபெறச் செய்த பெருமை வெறும் நாவினுல் புகழ்ந்து விடக்கூடிய தல்ல.

—டால்ஸ்டாய்

அறம் செய்வது எப்படி என்பதைப் பற்றி தெளிவாக திட்டவட்டமாக வரையறுத்துக் கூறிய ஒரே ஒரு சட்டமேதை யாக விளங்குபவர் முகம்பது நபி ஒருவரே.

—கிப்பன்

செந்தழலைக் குளிராகவும், சினங்கொண்டு சீறிவரும் பகையைக் குணங்கொண்ட நட்பாகவும் மாற்றவல்ல மன வலிமைமிக்க மேலோர் நபிகள் நாயகம்.

—கலைஞர் கருணாநிதி

THAMIZH NOOL KAPPAGAM
Thamizh Nagar, Viruthachalam - 606 001